# இசைவாணி

கதைத் தொகுதி

ப. நீலகண்டன்

கலைவாணி

கு ம்

அ ... ள்ளி

க ... ருக்கு



... ாஜ்

ஷ ... ாரம்

# இசை வாணி

## சிறு கதைத் தொகுதி

★

ஆசிரியர்

★

ப. நீலகண்டன்

காமராசர் பல்கலைக்கழக அவ்வை தி. க. சண்முகம் நூலகம் தமிழியல் துறை.

354



கலைவாணிக்க

புதுக்கோட்

பதிப்புரிமை ::

## அட்டவணை


| | | |
|---|---|---|
| 1. | இசைவாணி ... | 5 |
| 2. | சினிமாக் கதை ... | 15 |
| 3. | தியாகம் ... | 18 |
| 4. | மாற்றுந்தாய் ... | 28 |
| 5. | ஸ்வீகாரம் ... | 35 |
| 6. | ராக்காயி ... | 51 |
| 7. | விதியின் விளையாட்டு | 59 |
| 8. | விஷ பானம் ... | 67 |
| 9. | யோகி ... | 76 |
| 10. | பைத்தியம் ... | 85 |
| 11. | தெய்வப் பிறவி ... | 92 |
| 12. | இசைவாணன் ... | 103 |



மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை.

சண்முகம் நூலகம்,
706
706


ப. நீலகண்டன்

எழுதிய வேறு நூல்கள்

கோசலைச் செல்வன்
மிதிலைச் செல்வி
இன்பப் பொழில்
மல்லிகைத் தோட்டம்
இன்ப வாழ்வு
தாசிப் பெண்
உன் கடமை

அறிவு அபிவிருத்தி சங்கம்
மதுரை.
பால ஷண்முகானந்த சபா.

# இசை வாணி

★

காமராசர் பல்கலைக்கழக நூலகம்

விற்பனை உரிமையாளர்:
**தமிழ் நூல் நிலயம்**
கடலூர், O. T., (தென்னாற்காடு ஜில்லா)

★

## உயர்தரமான நூல்கள்

ஆசிரியர்: ப. நீலகண்டன்
எழுதியவை

| | | | |
|---|---|---|---|
| கோசலைச் செல்வன் | 1 | 0 | 0 |
| மிதிலைச் செல்வி | 1 | 8 | 0 |
| மல்லிகைத் தோட்டம் | 1 | 4 | 0 |
| இன்ப வாழ்வு | 0 | 10 | 0 |
| உன் கடமை | 0 | 1 | 0 |

★

எங்களிடம், கலைமகள், சக்தி, அல்லயன்ஸ், அன்பு நிலையம், நவயுகப் பிரசுராலயம், ஜோதி நிலயம் முதலிய பதிப்பகங்களின் புத்தகங்களும் கிடைக்கும்.

மானேஜர், தமிழ் நூல் நிலயம், கடலூர், O. T.

முதற் பதிப்பு, 1944, செப்டம்பர்



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

27–1–1979

கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், ஜி. டி., மதராஸ்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழ்ப்பகுதி

# இசைவாணி

நாங்கள் புது வீட்டுக்குக் குடி போய் இரண்டு நாள் கூட ஆகவில்லை. திண்ணையில் சாய்ந்தபடியே ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தேன். பூட்டிக்கிடந்த எதிர்த்த வீடு திறந்திருந்தது.

அந்த வீட்டுக்குத்தான் நாங்களும் முதலில் குடி வருவதாக இருந்தோம். எங்கள் மேல் அனுதாபம் காட்டிய பலர் அந்த வீட்டைப் பற்றிய உண்மை விஷயத்தைச் சொல்லி விட்டார்கள். அந்த வீட்டில் பேய் உலாவுகிறதாம்! அங்கே குடி வருகிற ஒருவராவது ஆறு மாதத்திற்கு மேல் தங்குவதில்லையாம்! இன்னும் என்னவெல்லாமோ பயங் காட்டிவிட்டார்கள்.

இம்மாதிரி விஷயங்களில் எனக்கு அவ்வளவு நம்பிக்கை கிடையாது. என்றாலும் இவ்விஷயம் பெண்கள் காதில் விழுந்து விட்டால், இனாமாக விடுவதாயிருந்தாலும் அவ்வீட்டுக்குக் குடி போவார்களா? அதனால்தான் இந்த வீட்டைப் பிடித்தோம்.

"எதிர்த்த வீட்டுக்கு யார் குடி வந்திருக்கிறது?" என்று கேட்டேன்.

"யாரோ பாடகியாம்!" என்றாள் என் மனைவி.

இந்தப் பெண்களுக்குத்தான் எப்படியோ தெரிந்துபோகின்றன எல்லாச் செய்திகளும்!

அன்றிலிருந்துதான் இந்த நிகழ்ச்சி ஆரம்பம். அவள் பாடகியாக இருக்க வேண்டுமா? எதிர்த்த வீட்டுக்குக் குடி வரவேண்டுமா? இவை போகட்டும்! நான் பத்திரிகாசிரியராக இருக்க வேண்டுமா? என்ன செய்கிறது? இப்படி ஆக வேண்டு மென்றிருக்கிறதே! இது விதியின் சூழ்ச்சி தானே?

சில தினங்களுக்குப் பின் இசை யரங்கில் அவளுடைய கச்சேரியைக் கேட்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவளுக்குக் கலைவாணி என்று எப்படிப் பெயர் வைத்தார்களோ என்றுதான் நான் இன்னும் ஆச்சரியப்படுகிறேன்.

அவள் கலைவாணிதான்; அழகில் ரதி; அவள் தாழம்பூ நிறமேனியை அலங்கரிக்க உடைகள்தாம் என்ன பாக்கியம் செய்தனவோ? விளக்கொளியில் ஜவ்வாது மின்னுவது, 'கலா வல்லியின் குளிர்ந்த நெற்றியில் அமரும் புண்ணியம் செய்தோமே' என்பதை எண்ணித்தானே?

அவள் குரலைக்கேட்டு குயில்கள் வெட்க வேண்டும். கலைவாணி கிளி மொழியாள். அவள் பொழிகிற சங்கீதம் இதயத்தைத் தொடுகிறது. வீணை அவளுடன் பேசுகிறதா? அவள் சொல்கிறபடியெல்லாம் கேட்கிறதே!

தன் குரலுடன் வீணையின் லயத்தையும் குழைத்து அள்ளி அள்ளி வீசினாள். வீணை

யின் நரம்புகளை அவள் தடவும் பொழுது என் உள்ள நரம்புகளும் தடவப்பட்டது போலிருந்தது. நாற்பது அடிகளுக்கு அப்பாலிருந்துகொண்டு என் இதய நரம்புகளைத் தட்டி விட்டாள்.

இந்த தேவகானத்தைக் கேட்டவுடன் தான் நான், விமர்சகனாக இருக்கும் பாக்கியத்தை எண்ணி மகிழ்ந்தேன். எவ்வளவோ பேர் இசையின்பத்தை மனமார அனுபவித்தார்கள். என்றாலும் அவர்களில் ஒருவராவது மற்றவர்கட்கு எடுத்துச் சொல்லும் ஆற்றல் பெற்றிருப்பார்களா? இந்த அரிய கானத்தைப் பலருக்கும் எடுத்துச் சொல்ல என்னால் முடிந்தது மகிழ்ச்சிக்குரிய விஷயமல்லவா? கலைவாணியின் படத்துடன் நான்கு பக்கம் விமர்சனம் எழுதினேன். விமர்சனம் எப்படி எழுதினேன் என்பதை மறுபடியும் சொல்ல வேண்டியதில்லையே!

முதல் முதலாக அவளே என்னைப் பார்க்க விரும்பினாள். விமர்சனத்திற்கு நன்றி கூறினாள். நூற்றுக் கணக்கான ரசிகர்கள் விமர்சனத்தைப் பாராட்டி எனக்குக் கடிதங்கள் எழுதியிருந்தனர். என் ரசிகத்தன்மையை கலைவாணி எவ்வளவு தூரம் பாராட்டினாளோ, அதை விட அதிகமாகவே என் பத்திரிகா நேயர்களும் பாராட்டியிருந்தனர். அவளுடைய சங்கீதத்தை, நான் மட்டுமல்ல; என்னைப் போன்ற ஆயிரக் கணக்கானவர்கள் ரசிக்கிறார்கள் என்பதை அறிந்தபோது இன்னும்

ஆனந்தமடைந்தேன். நானே பாராட்டப் படு வது போன்ற உணர்ச்சி எற்பட்டது எனக்கு.

கலைவாணி பரம்பரை வித்வத்தன்மை நிரம்பிய குடும்பத்தில் தோன்றியவள். பெரிய வித்வானிடம் சிட்சை பெற்றவள். வயது பதினெட்டுதான். அவளும் அவளுடைய பாட்டியும்தான் இங்கே வசித்தார்கள்.

தினமும் மாலையில் விளக்கேற்றிப் படத்திற்குப் பூஜை செய்தவுடன் பாட ஆரம்பிப்பாள். என் வீட்டு வாசல் திண்ணையில் உட்கார்ந்து சிறிது நேரம் கேட்பேன். என் உள்ளத்தை அப்படியே இழுக்கும் அந்த சங்கீதம். மெள்ள மெள்ள நடந்து எதிர்த்த வீட்டுக்குப் போய்விடுவேன்.

"வாருங்கள்!" என்று புன்முறுவல் தவழும் முகத்தோடு சொல்வாள்; உட்காருவேன்; மேலும் பாடுவாள். இம்மாதிரி சில நாட்கள் நடந்தன. இதற்குள் ஓரளவு பழகிவிட்டோம். அதன் பின் மாலை 6 மணியானால் கலைவாணியின் வீட்டில்தான் என்னைக் காணலாம்.

* * *

ஒருநாள் "உங்களுக்கு ஏன் இன்னும் கலியாணம் ஆகவில்லை?" என்று கேட்டேன்.

அவள் சொன்னாள். "இசைமூலமாகவே இறைவனை அடையவேண்டுமென்பது என் எண்ணம். இறைவனுக்கே என் உடலையும், உயிரையும் கூடச் சமர்ப்பித்துவிட்டேன். அதிலே நான் மெய்ம்மறந்த ஆனந்தத்தை அனுபவிக்கிறேன். இறைவனைத் தவிர வேறு

ஒருவருக்கும் என் இதயத்தில் இடம் கொடுப்பதில்லை என்றிருந்தேன். சில நாட்களாக, அந்த உறுதி தளர்ந்து விடுமோ என்று அஞ்சுகின்றேன்."

"அப்படியா?" என்றேன்.

"ஆமாம், என் உறுதி தளர்கிறது. நெஞ்சு குழைகிறது."

"இவ்வுலக வாழ்வை வெறுத்துத்தான் நீங்கள் இறைவனை அடையவேண்டுமென்பதில்லை. எல்லாவற்றையும் அனுபவித்தே இறைவனை யடையலாம். இறைவனுக்கு நம் பக்தியைச் செலுத்த, அவனால் உண்டாக்கப் பட்ட மற்றவைகளைத் துறக்கவேண்டுவது அவசியமா?"

"இல்லை, நான் துறவி என்று சொல்லவில்லையே;"

"துறவி இல்லை. உண்மைதான். ஆனால் நீங்கள் கடமையைச் செய்யவில்லை. மணம் புரிந்து இல்லற வாழ்க்கையை அனுபவிக்க வேண்டுமென்பதே இறைவனின் கட்டளை."

"அப்படி நான் எண்ணாமலிருந்தேன். கன்னியாகவே காலங் கழித்துவிடத் தீர்மானித்திருந்தேன்! நாதோபாசனைதான் எனக்கு எல்லாம். வீணையே எனக்குத் துணை. இசை இன்பமே எனக்கு உலக இன்பம். இறைவன் இப்பொழுது என்னைச் சோதிக்கிறான் போலும்!"

"காட்டிலே மலர்ந்து கிடக்கும் புஷ்பத்தால் யாருக்கு என்ன உபயோகம்? அந்த

மலர், மலர்ந்ததன் பயனையாவது அனுபவிக்கிறதா? அது அழகி ஒருத்தியின் தலையை அலங்கரித்தால் எவ்வளவு சுகந்தம்? உங்கள் பருவகால அழகை நீங்கள் வீணாக்குகிறீர்கள்!"

"ஐயோ! போதும். ஏற்கனவேயே என் உள்ளம் நெக்கு விட்டுவிட்டது. அதை உறுதிப் படுத்தமுடியுமா என்று நான் பார்க்கிறேன். நீங்கள் அதை அக்கு வேறு ஆணிவேருகக் கழற்றுகிறீர்களே!"

"நான் போகட்டுமா?"

"இருங்கள்!"

"கலா........!"

"சொல்லிவிடுகிறேன். உங்களிடம் பழக ஆரம்பித்ததிலிருந்து என் உறுதி குலைந்து விட்டது. நான் உங்களை மனமார..............."

"நான் பாக்கியம் செய்தவன். உன் இன்னிசை என் இதயத்தை உருக்குகிறது. உன் கண்கள் என் கருத்தை உண்டுவிட்டன. உன் மேனி அழகு......."

"போதும்! உங்கள் ரசிகத்தன்மைதான் என் நெடுங்கால உறுதியைப் பாழாக்கிவிட்டதே"

* * *

சில மாதங்களுக்குப் பின்னர் ஒருநாள். வராந்தாவிற்குப் பக்கத்திலுள்ள அறையிலிருந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தேன். வராந்தாவில் உட்கார்ந்து மேஜைத் துணி

பின்னிக்கொண்டிருந்தாள் என் மனைவி. அடுத்த வீட்டுக்காரி வந்து சேர்ந்தாள். என்னென்னவோ பேசினார்கள்.

சிறிது நேரத்திற்குப் பின், "ஏம்மா, உங்க புருஷன் எதிர்த்த வீட்டிற்கு அடிக்கடி போகிறாப்போலிருக்கிறதே!" என்றாள்.

"ஆமாம், பாட்டு கேட்பதற்காகப் போகிறார், என்ன விஷயம்?" என்றாள் என் மனைவி.

"என்ன விஷயமா? என்ன வோம்மா? ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளவேண்டியது உன் பொறுப்புத்தான். அந்தப் பாட்டுக்காரிக்குக் கலியாணம் ஆகவில்லையாம், தெரியுமா? ஜாக்கிரதை!"

என் மனைவி மௌனமாயிருந்தாள். இந்தச் சம்பாஷணை எனக்கு மிகவும் சங்கடத்தை யளித்தது.

சிறிது நேரத்திற்குப் பின் அவள் வந்தாள். "நீங்கள் கலைவாணியின் வீட்டுக்குப் போவதைப் பற்றி இவ்வீதியிலுள்ளவர்கள் பலமாதிரியாகப் பேசுகிறார்கள். அவள் நல்லவள் இல்லையாமே?"

"யார் சொன்னது? நல்லவள் இல்லையா? நாக்கு அழுகிப்போகும். மகா புனிதவதியாயிற்றே"

"உங்களுக்கு அதைப்பற்றி எல்லாம் ஒன்றுமே தெரியாது. மயங்கிவிடாதீர்கள்!" என்றாள். இவ்வார்த்தை பேரிடி போலிருந்தது.

என்ன இப்படிச் சொல்லுகிறாள்? மயங்கி விடாதீர்கள் என்கிறாளே! நான் மயங்கித் தானே போனேன்! எங்கள் காதலுக்கு இவள் இடையூறாக இருப்பாளோ? காலம் வரட்டும், இவளைச் சமாதானப் படுத்துவோம் என்று எண்ணினேன்.

* * *

ஒருநாள் இரவு 8 மணி இருக்கும். என் தம்பி கலைவாணியின் வீட்டிலிருந்து வந்தான். "எங்கேடா போய் வருகிறாய்?" என்றேன். "மதனி ஒரு கடிதம் கொடுத்து,கலைவாணியிடம் காண்பித்துவிட்டு வரச்சொன்னாள். காண்பித்துவிட்டு வந்தேன்." என்றான். அதை வாங்கிப் பார்த்தேன். பின்வருமாறு எழுதியிருந்தது.

"கலைவாணி!

கணவன் கொம்பு. மனைவி கொடி. கொம்பைப் படர்ந்து நிற்கும் கொடியைப் பிரிப்பது பாவம். அல்லது அதன் மேல் இன்னொரு கொடியைப் படர விடுவதும் முறையன்று. எனக்கே உரிமையான ஒரு பொருளை நீ விரும்புவது முறையா?

"என் கணவரும் நீயும் மணம் செய்து கொள்ளப் போவதாகக் கேள்விப்பட்டேன். உன்னை பணிவுடன் கேட்கிறேன். என் கணவரை என்னிடமிருந்து பிரிக்க வேண்டாம்.

"நீ அழகு ராணி, கலாசுந்தரி. உன்னை மகாராஜாக்கள் விரும்புவர். நீ என் கண

வரை விரும்பாதே. என் வேண்டுகோளைக் கேட்பாயா?"

அன்புள்ள **கோமதி**

கடிதத்தைக் கண்டதும் என் உள்ளம் கலங்கியது. என்ன செய்வது? கடிதத்தை அவனிடமே திருப்பிக் கொடுத்துவிட்டு மௌனமாக உணவருந்திப் படுக்கைக்குச் சென்றேன்.

விடிந்தவுடன் எதிர்த்த வீட்டை எட்டிப் பார்த்தேன். 'திகீ'ரென்றது. வீடு காலி! கலைவாணி எங்கே? இரவுக்கிரவே எங்கேயோ போய்விட்டாள்.

"நான் அப்பொழுதே சொல்லவில்லையா? பேய் உலாவுகிற வீடுதானே! ஆறுமாதத்திற்குள்ளாகவே இவளை விரட்டிவிட்டதே!" என்றார் அடுத்த வீட்டுக்காரர். எங்கே போயிருப்பாள்?

* * *

மூன்று தினங்களுக்குப் பிறகு என் மனைவியின் விலாசமிட்டு ஒரு கடிதம் கிடைத்தது, உடைத்துப் பார்த்தேன்.

"அன்புள்ள சகோதரி!

"என் கண்ணைத் திறந்துவிட்டீர்களே; அதற்காக நமஸ்கரிக்கின்றேன். படுகுழியில் விழ இருந்த என்னைக் கை தூக்கி விட்டீர்கள்.

"நான் கன்னியாகவே இருந்து இசை மூலம் இறைவனை நாடவேண்டுமென்பது என் உறுதி. உறுதி தளர்ந்தபோதுதான் இறைவன் தங்கள்மூலம் என்னைக் காப்பாற்றி அருள் புரிந்தான்.

"ரசிகர் என்பதற்காகத்தான் தங்கள் கணவரை விரும்பினேன். ஏன் அவரை விரும்ப வேண்டும்! இறைவன் பரம ரசிகனயிற்றே. என்னை மன்னியுங்கள். நான் எங்கிருக்கிறேன் என்று தேடிக் கண்டுபிடிக்க முடியாது? காலம் வரும், சந்திப்போம்.

அன்புள்ள கலா

அவளுடைய விலாசம் அக் கடிதத்தில் எழுதப்படவில்லை. எங்கிருந்து எழுதினளோ? அவளுடைய அன்பையும், தியாகத்தன்மையையும் நினைக்கும்பொழுது என் நெஞ்சு விம்மியது.

"அவள், தியாகி; தெய்வப் பணிக்காகத் தன்னை அர்ப்பணித்தாள். அவள் சுகமே இருக்க இறைவன் அருள்புரியட்டும்" என்று என் வாய் முணு முணுத்தது.

* * *

அடுத்தமாதம் பிறந்த எங்கள் செல்வத் திருமகளுக்குக் 'கலைவாணி' என்று பெயரிடும்படி சொன்னுள் லட்சுமி.

# சினிமாக் கதை

நண்பன் சீனு சிறந்த எழுத்தாளன். சோகத்திலே ஊறினது அவன் வாழ்க்கை. அதனால்தானோ என்னவோ அவன் கதைகள் சோகசித்திரமாக விளங்கின. தன் எழுத்துத் திறமையினால் புகழ்மலையின் உச்சியை யடைந்து விடவேண்டுமென்று அவன் விரும்பவில்லை. வறுமையிலிருந்து சிறிதாவது விலக முடியுமா என்பதே அவன் யோசித்ததெல்லாம்.

ஏதோ சிறுகதைகள் எழுதினான்! சில பத்திரிகைகள் பிரசுரித்தன. மூன்று நாலு என்று பணமும் வந்தது. இதெல்லாம் எந்த மூலைக்கு?

சீனு ஒரு நாள் சினிமா பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று அவனுக்கு ஒரு அற்புதமான யோசனை தோன்றிற்று. "சினிமாவுக்குக் கதை எழுதிக்கொடுத்தால் முதலாளி பணத்தை அள்ளி விட்டுவிடுவார். நம்முடைய வறுமையே அகன்று விடும்." இப்படி எண்ணியவுடன் அவனுக்குப் படம் பார்ப்பதிலே கவனம் செல்லவில்லை. சினிமாவுக்குக் கதை எழுத 'பிளாட்' தயாரித்துக் கொண்டிருந்தது அவன் மனது.

அன்று இரவே பிள்ளையார் சுழியுடன் கதை எழுத ஆரம்பித்து விட்டான். ஒரு

வாரத்தில் எழுதியும் முடித்துவிட்டான். படமுதலாளிகளுக்கு இதை எப்படி யனுப்புவது? நகல் செய்து அனுப்பமுடியுமா? இதற்கும் அவனுக்கு உருப்படியான ஒரு யோசனை தோன்றிவிட்டது. இதுவரை அவன் கதை எழுதிச் சம்பாதித்தது 27 ரூபாய்! தன் சினிமாக் கதை.—'கன்னியா குமரி' இதைச் சுருக்கமாக எழுதி 300 பிரதிகள் அச்சிட்டுவிட்டான். கதைச் சுருக்கத்தை அனைவருக்கும் அனுப்பினான். பலரிடமிருந்து 'தற்சமயம் தேவையில்லை' என்று பதில் வந்தது. சிலர் பதிலே எழுதாதிருந்து விட்டனர்!

நாட்களாகி, மாதங்களாகி வருஷமும் கழிந்தது. இருந்த இருபத்தேழு ரூபாயும் செலவழித்துவிட்டு இப்படி இருக்கிறோமே என்று எண்ணியபோது அவனுக்கு எல்லைமீறிய வருத்தம் ஏற்பட்டது. எதற்காக எழுத்தாளனானோம் என்று இப்பொழுதுதான் சிந்திக்கக் தொடங்கினான். கால வித்தியாசம்தான்!

ஒரு நாள் கோகிலா பிலிம்ஸாரின் 'காவேரி' சினிமாவைப் பார்க்கப் போயிருந்தான் சீனு. கதையைப் பார்க்கப் பார்க்க சீனுவுக்குக் கண்ணீர் பெருக்கெடுத்தது. வயிற்றைப் பற்றிக் கொண்டுவந்தது. அந்தக் கதை எழுதியவன் அங்கே இருந்தால் தன்நிலையையும் மறந்து அவனைக் கசக்கிப் பிழிந்து விட்டிருப்பான். ஏனென்றால் காவேரி கதை சீனு எழுதிய கன்னியாகுமரி கதைதான் பெயர்கள் தாம் மாற்றம். 'தற்சமயம் தங்கள் கதை தேவையில்லை' என்று எழுதியவர்களில் கோகிலா

பிலிம்ஸாரும் ஒருவர் என்பதை சீனு மறக்க வில்லை.

சீனுவின் மன நிலையை என்னல் வர்ணிக்க முடியாது. அவரவர்களே யூகித்துப் பார்த்துக் கொள்ளவேண்டியது தான்.

கடைசியாக சீனு ஒருவித முடிவுக்கு வந்தான். "எற்கனவே அச்சிட்ட தன் கதைச் சுருக்கத்தை கோகிலா பிலிம்சாருக்கு அனுப்புவது; அவர்களுடைய திருட்டுத்தனத்தை நான் தெரிந்துகொண்டேன் என்பதை அவர்கள் அறியட்டும்" என்று எண்ணினன். இதையறிந்ததும் அவர்கள் அப்படியே வெட்கப் பட்டுப் பிராணனைவிட்டு விடுவார்கள் என்று எண்ணினன்போலும்!

மூன்று தினங்களுக்குப் பிறகு கோகிலா பிலிம்ஸாரிடமிருந்து அவனுக்குக் கிடைத்த கடிதத்தைப் பாருங்கள்.

"தங்களுடைய 'கன்னியா குமரி' கதைச் சுருக்கம் கிடைத்தது. நம்முடைய காவேரி படத்தைப் பார்த்துவிட்டுக் காப்பியடித்து எழுதி யிருக்கிறீர்கள். எங்கள் கதையைக் காப்பி அடித்ததற்காக நாம் தங்கள்மீது சட்டப்படி வழக்குத் தொடராமலிருப்பதற்குக் காரணம் இனி இப்படிச் செய்யமாட்டீர்கள் என்ற நம்பிக்கையினலேயே."

இதைப் படித்தும் ஒரு பெருமூச்சுவிட்டு 'இதுதான் உலகம்' என்று சொல்லிக் கொண்டே பேனவை விட்டெறிந்தான் மாஜி எழுத்தாளன் சீனு.

# தியாகம்

மாணவர்கள் இரவு பகலாக ஆகாரத்தைப் பற்றிக் கவலைப்படாமலேகூட சித்திரம் வரைந்து கொண்டிருக்கிறார்கள். போட்டி என்றால் எவ்வளவு உத்வேகம் கிளம்பி விடுகிறது! அவரவர்கள் நோக்கம்போல் சித்திரம் வரையலாம். சித்திரம் இயற்கையானதாகவும் உணர்ச்சியை வெளிப்படுத்துவதாகவும் இருக்கவேண்டும். இதுதான் நிபந்தனை.

சோலை யொன்றில் ஒரு கன்னி மலர் கொய்வது போல சித்திரம் தீட்டினான் இரவிவர்மன். ஒரு இளைஞன் புறாவுடன் விளையாடுவதாகப் படம் வரைந்தாள் கலாவல்லி. இம்மாதிரி அவரவர்கள் தங்களுக்குத் தோன்றியவாறெல்லாம் படம் எழுதினார்கள்.

கலாநிலையம் அரச குடும்பத்தினருக்காக ஏற்படுத்தப்பட்ட சித்திரசாலை. இங்கேதான் குலசேகர பாண்டியனின் இரண்டாவது குமாரனான இரவிவர்மன் கல்வி கற்று வருகிறான். சோழாதிபன் இராஜேந்திரனின் ஏக புதல்வி கலாவல்லியும் சித்திரம் பயின்று வருகிறாள்.

இவர்களுடைய கல்வி தொடங்கி ஓராண்டு ஆகிவிட்டது. இன்னும் ஆறு மாதங்கள்தான் பாக்கி. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் மாணவர்க

வின் தேர்ச்சியைப் பரிசோதிக்க குரு பரீட்சை வைத்தார்.

சித்திர கூடத்திற்கு எல்லாருடைய படங்களும் கொண்டுவரப்பட்டன. குருவைத் தொடர்ந்து எல்லாருமே படங்களைப் பார்த்துக் கொண்டு வந்தனர். ரமாதேவி கலாவல்லியின் தோளைப்பிடித்துக் குலுக்கி "ஏண்டி! அன்றைக்கு நீ சித்திரசாலைத் தோட்டத்தில் பூப்பறித்துக் கொண்டிருந்தாயே! அதைப்போலவே சித்திரம் வரைந்திருக்கிறாரே, இரவிவர்மன்!" என்றாள். கலாவல்லி இதை முன்னாலேயே தெரிந்துகொண் டிருக்கிறாள் என்பது அவள் ஆச்சர்யப்படாமல் புன்முறுவல் செய்ததிலிருந்தே தெரிந்தது. என்றாலும் சாமர்த்தியமாக "இந்த மாதிரியாடி நான் நின்றிருந்தேன்?" என்று சொல்லி அவள் கன்னத்தில் ஒரு தட்டுத் தட்டினாள்.

இரவிவர்மன் ஆழ்ந்த யோசனையோடு உலாவிக்கொண் டிருந்தான். "நான் அன்றைக்குப் புறாவுடன் விளையாடிக்கொண்டிருந்ததை இவள் எங்கிருந்து பார்த்தாள்? நான் எந்த முறையில் உட்கார்ந்திருந்தேனோ அதை அப்படியே யல்லவா எழுதியிருக்கிறாள்! பல நாட்களுக்குப் பிறகும் அந்தச் சந்தர்ப்பத்தை நினைவில் வைத்தல்லவா எழுதியிருக்கிறாள்!" என்று வியந்தான்.

இரவிவர்மன் எழுதிய படம் முதற் பரிசு பெற்றது; கலாவல்லியின் படமே இரண்டாவது பரிசுக் குரியதாயிருந்தது.

* * *

குளத்துப் படிக்கட்டில் உட்கார்ந்து தண்ணீரில் கால்களைத் தொங்கவிட்டுக்கொண்டிருந்தாள் கலாவல்லி. குயில் ஒன்று "கூ கூ" வென்று இசை பாடிக்கொண்டே பறந்து சென்றது. அந்த இனிய நாதம் காதில் விழுந்ததும் ஆனந்தம் மேலிட்டுவிட்டது போலிருக்கிறது அவளுக்கு! தண்ணீரில் கால்களை ஆட்டிக்கொண்டு இனிய பாட்டொன்றைப் பாடினாள்.

அவளுக்கு முன்னாலே தண்ணீரில் படீரென்று ஒரு கல் விழுந்தது. அலைகள் கிளம்பின. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். வெட்கம் மேலிட்டுவிட்டது. புன் முறுவலுடன் தலை குனிந்தவண்ணம், "நீங்களா?" என்றாள்.

"ஏன், பயந்துவிட்டாயோ!"

"பயமா! பயம் என்றால்? கோபந்தான் கொண்டேன். நீங்களல்லாது வேறு யாராகிலுமா யிருந்தால்....!"

"அப்படியே கசக்கிப் பிழிந்துவிட்டிருப்பாயாக்கும்!" இவ்வாறு பேசிக்கொண்டே அவள் அருகில் சென்றான் இரவிவர்மன்.

"என்னைப் போலவே படம் வரைந்துவிட்டாயே!"

"இல்லையே, அப்படியானால் நீங்கள் என்னைப் போலத்தான் படம் வரைந்தீர்களா?"

"ஆமாம்!"

“அப்படியானால் நானும் ஒப்புக்கொள்ளு கிறேன்!”

அவள் மறுபடியும் கால்களை தண்ணீரில் தொங்கவிட்ட வண்ணம் உட்கார்ந்தாள். இரவி வர்மனும் அவளுக்கருகில் அப்படியே உட் கார்ந்தான்.

கலாவல்லி எழில் மிகுந்த மங்கை. இரவி வர்மன் ஆண்களின் சிகரம். கலை ஆர்வம் படைத்த இருவரும் நாளடைவில் காதல் வசப் பட்டனர்.

* * *

சில மாதங்களுக்குப் பிறகு.

காதலர் இருவரும் நீரோட்டத்தைப் பார்த் துக் கொண்டு உட்கார்ந்திருந்தனர். எப்பொழு தும் தாண்டவமாடும் ஆனந்தத்திற்குப் பதில் கவலை குடிகொண்டிருந்தது அவர்கள் முகத் திலே. இன்னும் இரண்டு தினங்களில் அவர் கள் பள்ளி வாழ்க்கை முற்றுப் பெறுகிறது. தங்கள் தங்கள் ஊருக்குப் புறப்பட வேண்டி யதுதான். கவலை யில்லாதிருக்குமா?

“உனக்குக் கலியாணத்திற்கு ஏற்பாடுசெய் யப்படும்பொழுது உன் தந்தையிடம் சொல் வாயா?” என்று கேட்டான் இரவிவர்மன்.

“கண்டிப்பாகச் சொல்வேன். நான் விரும் புகிற மணாளனை மணக்க என் தந்தை அனு மதி கொடுக்க மறுக்கமாட்டார்.”

“உன்னை விட்டுப் பிரியவேண்டி யிருப்





காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.

பதை நினைக்கும்பொழுது என் உள்ளம் பரித விக்கிறது."

"ஒன்றுபடுவதற் கறிகுறிதான் இந்தப் பிரிவு என்று நினைக்கவேண்டும்."

கடைசி தினத்தை இவ்வாறுகப் பேசித் தான் கழித்தார்கள்!

* * *

"கண்மணி கலா, குலசேகர பாண்டியன் தமது குமாரனுக்குப் பெண் கேட்டு ஆள் அனுப்பியிருக்கிறுரம்மா!" என்றுர் சோழ மகாராஜா இராஜேந்திரன்.

"அப்பா, இரவிவர்மனுக்கா, அப்பா!"

"இரவிவர்மனுக்கா! அவன் இளைய குமார னல்லவா? முதல் மகனுக்குச் செய்து விட்டுத் தானே, இளைய குமாரனுக்குச் செய்வார்கள்! முதல் குமாரன் மார்த்தாண்டனுக் கல்லவா கேட்டுவிட்டிருக்கிறுர்."

"நீங்கள் என்ன பதில் சொன்னீர்கள் அப்பா?"

"மார்த்தாண்டனை எனக்குத் தெரியு மம்மா! அவனுடைய கல்வியும், அழகும் எல்லோராலும் போற்றக் கூடியவை. உனக்கு ஆட்சேபனை இராதென்று ஒப்புக்கொண்டு விட்டேன். சரிதானே, கண்மணி?"

"இதோ தாயார் வருகிறுர்கள். கலந்து யோசியுங்கள், அப்பா!"

"தேவி, வா, மார்த்தாண்டன் இங்கு வந்திருந்த பொழுது நீ பார்த்திருக்கிறு யல்லவா? அவனுக்குக் கலாவைக் கொடுக்கும்படியாக பாண்டியன் நிரூபம் அனுப்பியிருக்கிறூர்."

"குழந்தையின் விருப்பம் வேறு மாதிரியாகவல்லவா இருக்கிறது."

"என்ன?"

"பாண்டியனுடைய இரண்டாவது குமாரனை இரவிவர்மனும் கலாவல்லியும் சித்திரம் பயின்றூர்களல்லவா? அப்பொழுது இருவரும் நேசமாகி விட்டார்கள். ஆகையினல் இரவிவர்மனைக் கலியாணம் செய்து கொள்ளவே விரும்புகிறூள்."

"அதெப்படி முடியும்? மூத்தவன் இருக்கும்பொழுது இளையவனுக்குக் கலியாணம் செய்வார்களா?"

"மூத்தவனுக்கு வேறெங்கேயாவது பெண் பார்த்துக் கொள்ளட்டுமே. சில வருஷங்களானலும் கலாவின் இஷ்டப்படி இரவிவர்மனுக்குத் தான் கொடுக்க வேண்டும்."

"நமக்கிருப்பது ஒரே பெண். பட்டத்திற்குரியவனுக்குப் பெண்ணைக் கொடுக்காமல் இளையவனுக்குக் கொடுத்து என்ன உபயோகம்? நம்முடைய பெண் மகாராணியாக வீற்றிருந்து நாம் பார்க்கவேண்டாமா?"

"மனமகிழ்ச்சி இல்லாமல் மகாராணியாக இருப்பதும் ஒன்றுதான். கன்னியாக இருப்பதும் ஒன்றுதான் அப்பா" என்றூள் கலா.

"நீ சிறுபிள்ளை, விஷயந் தெரியாமல் சொல்லுகிருய், பட்டத்திளவரசனை மணப்பதற்கு ஏற்பட்ட சந்தர்ப்பத்தை கை நழுவவிட்டதற்காகப் பின்னல் நீ வருந்தவேண்டியிருக்கும் அம்மா."

"அப்பா! காதலைவிட இராணியாக இருக்கும் அந்தஸ்து பெரிதென்று நீங்கள் கருதுகிறீர்களா?"

"என்னுடைய குமாரி ஒரு அரசனின் மனைவியா யிருப்பதைத்தானேயம்மா நான் விரும்புவேன்."

"உங்கள் கௌரவத்தை மட்டும் கருதுகிறீர்களா?"

"உன்னுடைய நன்மையைக் கருதி நான் ஒருமுடிவுக்கு வந்துவிட்டேன், கண்மணி. இப்பொழுது நான் செய்கிற முடிவின் நன்மையை நீ பிறகுதானம்மா தெரிந்து கொள்வாய்" என்று சொல்லிவிட்டு எழுந்து சென்ருர் மன்னர். கலாவல்லியும் தனதறைக்குச் சென்ருள்.

* * *

சோகமே உருவெடுத்தது போன்று உட்கார்ந்திருந்தான் இரவிவர்மன். மந்திரிகுமாரர்களான நண்பர்கள் இருவர் உள்ளே வந்தனர்.

"இரவி! ஏன் வாட்டமாயிருக்கிருய்?" என்ருன் ஒருவன்.

உற்ற நண்பர்கள் என்ற முறையில்

தனக்கு வந்த கடிதத்தை எடுத்துக்கொடுத்தான் இரவிவர்மன்.

"ஆமாம் இதற்கென்ன செய்ய உத்தேசம்?" என்ருன் மற்றவன்.

"என்ன செய்வது? பட்ட முள்ளவனுக்குப் பெண் கொடுக்க அவர்கள் விரும்புவது நியாயந்தான். நித்யப்பிரம்மச் சாரியாகி தேசாந்திரம் போகத் தீர்மானித்து விட்டேன்"

"அப்படிச் செய்ய வேண்டாம். நான் ஒரு வழி சொல்லுகிறேன். பட்டமே உனக்குக் கிடைக்கும்படியாகச் செய்துவிடுகிருேம்!"

"அதெப்படியடா முடியும்?"

"எப்படியா? பட்டத்திற்குரியவனை இல்லாது செய்துவிட்டால் அடுத்தபடியாகப் பட்டத்திற்குரியவர் நீங்கள் தானே பிரபு!"

"என்ன? என்ன சொன்ஞய்?"

"என்ன பிரபு! உங்கள் சகோதரனை....."

"வேறு யாராகிலுமாயிருந்தால்........இவ்வளவு நேரம் என் வாளுக்கு இரையாகியிருக்க வேண்டும். எழுந்திருங்கள். வெளியில் போங்கள்! போங்கள் வெளியே, உம்!"

மந்திரி குமாரர்கள் இருவரும் எழுந்து நடந்துவிட்டார்கள்.

இரவிவர்மன் தனக்குள்ளேயே பேசிக் கொண்டான்.

"தமையனைக் கொன்று பட்டம் ஆளவா? துரோகிகள், என்னைக் கொலை பாதகனுக்கத்

துணிந்து விட்டார்கள், அண்ணன் அன்பன், மகா உத்தமன், உண்மையாளன். கேவலம் பட்டத்திற்காகவா கொலை. இந்த ஜென்மத்தில் இல்லை. என் விதிக்கு யாரை நோவது? முடிவாகிவிட்டது. நான் பிரம்மச்சாரிதான்.''

ஏறிட்டுப் பார்த்தான். அந்த அறைக் கதவில் தொங்கவிடப் பட்டிருந்த திரைச் சீலையின் பக்கம் அவன் தமையன் செல்வது தெரிந்தது.

*　　　*　　　*

தந்தைக்கு விரோதமாய் சூழ்ச்சி செய்ததாகக் கைது செய்து நிறுத்தப் பட்டான் மூத்த குமாரன் மார்த்தாண்டன். சபையோர் ஆச்சர்யப்பட்டனர். பரம யோக்கியனை இவனு தந்தைக்கு விரோதமாக சூழ்ச்சி செய்திருக்க முடியும்? அரசனும் இதை நம்பவில்லை. சாட்சிகள் மார்த்தாண்டனுக்கு விரோதமாக இருந்தனர். ஏன்; மார்த்தாண்டனே சூழ்ச்சி செய்ததாக ஒப்புக்கொண்டு விட்டான். அதன் பின் சாட்சியும் தேவையா? 'பட்டத்திற்கு லாயக்கற்றவன்' என்ற தண்டனை விதித்து அவனை சாதாரண பிரஜையாக்கி விட்டனர். அவன் செய்த குற்றத்திற்குத் தண்டனை இதுவே. தண்டனையைக் கேட்டதும் புன் முறுவல் தவழ்ந்தது மார்த்தாண்டன் முகத்திலே.

மார்த்தாண்டன் தோட்டத்திலே பின்புறமாகக் கைகளைக்கட்டிக்கொண்டு உலாவுகிறான். "உண்மையான இருவர் இன்பமனுபவிப்பதை விட ஒருவன் பட்டம் ஆளுவது அவ்வளவு பெரிதா? அவர்கள் மணம் புரிந்துகொண்டு

சுகமாக ஆளட்டுமே! அவன் யார். என் தம்பி தானே?" என்று முணு முணுத்தது அவன் வாய்.

திருமணமும் பட்டமும் ஒரே நாளில் தீர் மானிக்கப்பட்டது இரவிவர்மனுக்கு! எதிர் பாராத வகையில் அண்ணன் தவறிழைத்துப் பட்டத்திற்குத் தகுதியற்றவனுக எப்படி யானுன் என்பது இரவிக்கு இன்னும் விளங்க வில்லை.

# மாற்றுந்தாய்

"சார்! இனியும் காலதாமதம் செய்வதில் பயனில்லை. இது உடல் வியாதியல்ல, மனோ வியாதி. உடனே தந்திகொடுத்துக் குழந்தையின் தாயாரை வரவழையுங்கள்" என்று சொன்னார் டாக்டர்.

ரகுராமனுக்கு உடல் பதறிற்று. குழந்தை படுத்துக்கொண்டிருக்கிறான். கண்ணைத் திறந்து ஒரு வாரமாயிற்று. அன்னந் தண்ணீர் ஒன்றும் கிடையாது. ஜுரம் சுட்டெரிக்கிறது. "அம்மா, அம்மா!" என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

* * *

ரகுராமனின் மூத்த மனைவி இறந்தபோது கோபாலன் நான்கு மாதக் குழந்தை. குழந்தை பேரில் அவனுக்கிருந்த அளவற்ற பிரியம் மறு கலியாணம் செய்த கொள்ளவேண்டாமென்றே தடுத்துவந்தது. குழந்தையை இரண்டு மூன்று வயதுவரை வளர்த்துவிடத் தகுதியானவர்கள் யாராவதிருந்தால் கலியாணத்திற்கென்ன அவசியம்? ஆண் குழந்தை தானே, அதற்குப் பின் நாமே வளர்த்துக்கொள்வோம் என்றே எண்ணினான். ஆனால் பச்சைக் குழந்தையைப் பொறுப்பாக வளர்க்கச் சரியான ஆள் கிடைக்கவில்லை. கலியாணம் செய்து கொள்

ளும்படியாக நண்பர்களும் உறவினர்களும் வற்புறுத்தினர்.

கலியாணம் செய்து கொள்வது என்கின்ற முடிவுக்கு வரும்போதெல்லாம் அவனுடைய மனசு என்னமோ செய்தது. அவனுடைய கற்பனு சக்தியே அவனை அலக்கழித்தது, சிந்தனை அவன் உடலை உலுக்கியது.

"கலியாணம் பண்ணிக் கொள்வதாக வைத்துக்கொள்வோம். மூத்தாள் குழந்தையை, வருகிறவள் சரியாகப் பார்த்துக் கொள்வாளோ? ஏதாவது அடித்து இம்சை செய்தால்? குழந்தை, அவள் இம்சிப்பதை என்னிடம் சொல்லிவிட்டால், நானும் அதைக் கேட்டுவிட்டால், மேலும் இம்சிக்கத்தானே செய்வாள்! அவளுக்கும் ஒரு குழந்தை பிறந்து விட்டால், அப்புறம் இவனைக் கவனிக்கவே மாட்டாள். குழந்தை பிறக்காவிட்டாலும்தான் என்ன, குழந்தை இல்லையே என்ற வெறுப்பினுல் இவனை இம்சை செய்தால் என்ன செய்வது? இவள் ஏதாவது உபத்திரவம் செய்யும் போதெல்லாம் "தன் தாய் இருந்தால் இப்படியெல்லாம் நடக்குமா?" என்று பையனும் எண்ணுவான்."

இப்படியெல்லாம் அவன் கற்பனு சக்தி அபாரமாக வேலை செய்யத் தொடங்கிற்று. சிந்தனையே பெரும் புயலாக மாறி அவன் உள்ளத்தை அலக்கழித்தது. இவ்வளவுக்கும் காரணம் அவனுக்குக் குழந்தைபேரில் இருந்த பிரியம்தான்.

சொந்தத்தாய் எவ்வளவுதான் அடித்

தாலும் வித்தியாசமாகத் தோன்றுவ தில்லை. மாற்றாந்தாய் லேசாக ஏதாவது சொல்லிவிட்டாலும், அவள் மாற்றாந்தாயாக இருப்பதினாலேயே பெரிதாகத்தோன்றி விடு கிறது. குழந்தைபேரில் பிரியமுள்ள தந்தை யாக இருந்தால் இரண்டாந்தாரத்தின் செய்கை அவனுக்கும் மலையத்தனையாகத் தெரியும். இளையவள் மூத்தாளின் குழந்தையை அன் பாக வைத்துக் கொண்டிருந்தாலுமே சரிதான், ஊரிலுள்ளவர்கள் சும்மா இருக்கமாட்டார்கள். கணவன் இளையாளின் மையலில் உழல்வதாக வும் 'அவள்' குழந்தையைக் கவனிப்பதே இல்லையென்றும் கதைகட்டி விடுவார்கள். இது உலக இயற்கை.

இந்த உலக இயற்கையை நன்றாக அறிந்த வன் ரகுராமன். அதனாலேயே கலியாணம் செய்து கொள்ளாமல் இருந்து விடுவோமே என்று எண்ணினான்.

கடைசியில் ஒரு வழியாக, சிசுவை வளர்ப் பதற்காகக் கலியாணம் செய்து கொள்வ தென்ற முடிவுக்கு வந்தான்!

சீதாலட்சுமி வந்து சேர்ந்தாள். லட்சுமி குழந்தையை எப்படிப் பாதுகாக்கிறாள் என் பதை ரகு மறைமுகமாகப்பார்த்து வந்தான். அன்பாக வளர்ப்பதாகத்தான் அவனுக்குத் தோன்றிற்று. அப்பொழுதும் அவனுடைய கற்பனா சக்தி அலக்கழிக்கத் தொடங்கிற்று. "ஒருவேளை தான் இருக்கிறவரை அன்பாக நடத்துவதாக நடித்துகாட்டிப் பிறகு கவனிக்

காமல் விட்டுவிடுவாளோ?" என்றெல்லாம் எண்ணினன்.

இப்படியெல்லாம் எண்ணங்கள் உதிக்காமல் இருக்கக்கூடாதா என்றுகூட பகவானை வேண்டினன். என்ன செய்வது?

இப்பொழுது கோபாலனுக்கு நாலுவயது. அவனுக்கு சீதா லட்சுமிதான் தாய், தன்னைப் பெற்றவள் வேறொருவள் என்பது கூட அவனுக்குத் தெரியாது.

ஒருநாள் காலை. ரகுராமன் தன் அறையில் உட்கார்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தான். திடீரென்று சமையற்கட்டில், கோபாலன் அழுவது தெரிந்தது. ரகு ஓடிப்போய்ப் பார்த்தான்.

"ஏண்டா அழுகிறாய்?" என்றான்.

"காப்பிப் பாலைக் கொட்டிவிட்டான், சமையற்கட்டில் என்ன பந்துவிளையாட்டு, கழுதை!" என்றாள் சீதாலக்ஷ்மி.

"அதற்காக நீ அடித்தாயோ?" என்றான் ரகு கோபமாக.

"ஆமாம், அடித்தேன்" என்றாள், தாயின் உரிமையோடு.

"அடித்தாயா?" என்று கேட்டுக்கொண்டே லட்சுமியை, இரண்டு அறை அறைந்துவிட்டான்.

லட்சுமி "அம்மா!" என்று மட்டும் சொல்லி முகத்தை மூடிக்கொண்டாள். எதிரொலி மாதிரி கோபுவும் "அம்மா!" என்று சொல்லிக்கொண்டே லட்சுமியைக் கட்டிக்

கொண்டான். அவளும் இவனை அணைத்துக் கொண்டே தேம்பினாள்.

ரகுராமனுக்கு என்றைக்குமில்லாத கோபம் வந்துவிட்டது. வெளியே வந்தான். ரோட்டோடு போய்க் கொண்டிருந்த வண்டியைக் கூப்பிட்டான். "டேய், ஸ்டேஷனுக்குப் போகவேண்டும். வா!" என்றான். விடு விடு என்று உள்ளேபோய், "லட்சுமி! வா, இந்தா பத்து ரூபாய். உன் பிறந்த வீட்டுக்குப்போ நான் கூப்பிடும்போது வரலாம்" என்று சொன்னான். அவள் தயங்கி நின்றாள்.

"போ!" என்று கர்ஜித்தான். அவள் போய் வண்டியில் ஏறிக்கொண்டாள். "வாயேண்டா!" என்று கோபுவைக் கூப்பிட்டாள். அவனும் ஓடிப்போய் வண்டியில் ஏறப் போனான். ரகு அவன் தலையில் ஒரு குட்டு குட்டி இழுத்துவந்தான். லட்சுமி தன்னையறியாமல் "அவனை அடிக்காதீர்கள்!" என்று கத்தினாள். "என்ன பாசாங்கு செய்கிறாள்?" என்று எண்ணியவாறே உள்ளே போய் விட்டான் ரகு.

மறுநாள் முதல் கோபாலனுக்கு ஜுரம். "அம்மா!" "அம்மா" என்ற ஒரே நினைவு தான்.

ரகுவின் கற்பனை சக்தி மறுபடியும் வேலை செய்ய ஆரம்பித்தது.

"நான் இருக்கும் போதே அடித்தாளே, இல்லாத போது எப்படி அடித்திருப்பாள்? ஆனால்—ஆமாம் நான் வெளியில் போயிருக்கும்

பொழுது அடித்து இம்சிப்பவளா யிருந்தால் நான் இருக்கும் பொழுது அன்பாக வல்லவா வைத்திருப்பாள்? இந்தக் குழந்தை அம்மா அம்மா என்று கத்துகிறதே, இதற்குத்தான் அவள்பேரில் எவ்வளவு விஸ்வாசம்! அவள் அன்பா யில்லாவிட்டால் இவனுக்கு மட்டும் அன்பு எப்படி வரும்? நான்தான் தவருக நினைத்துக் கொண்டேனே?"

இப்படியெல்லாம் எண்ணினன். டாக்டரோ உடனே அம்மாவை வரவழையுங்கள் என்கிருர். என்ன செய்வது? தஞ்சையிலிருந்து கும்பகோணம் எவ்வளவு தூரம்? ஆள் அனுப்பிக்கூட அழைத்து வரச் சொல்லலாம். ஆனல், ஆண்மை உணர்ச்சி அவனைத் தடுத்தது. பாழாய்ப்போன சிந்தனைதான் இன்னும் சீர்குலைய வைத்தது.

ரகு பெண்மையை அறியாதவன். வெறும் சிந்தாணுவாதி. பெண் உருவத்திலுள்ள எல்லாரும் பெண்தானு? பெண் உருவம் மட்டும் உள்ள சில ராட்சசிகளைப் பார்த்துவிட்டு, அந்த வர்க்கமே இப்படித்தான் இருக்கும் என்று முடிவு கட்டுவதா? பெண்மை எவ்வளவு லளிதமானது: தாயின் மனப்பண்பு அவனுக்குத் தெரியுமா? அவளுக்கு அணைக்கமட்டும்தான் சொந்தமா? அடிப்பதற்கு உரிமை யில்லையா? கோபுவைவிடக் குழந்தையாகிவிட்டான் ரகு. கோபுவுக்கு அம்மாள் பேரிலுள்ள பாசத்தைக் கூட இவனல் உணர முடியவில்லையே!

கட்டிலின் பக்கத்திலுட்கார்ந்து "கோபு, இந்தப்பாலைக் குடித்துவிடடா" என்று சொல்

விக் கொண்டிருந்தான். அதற்குக் கோபுவிட மிருந்து வந்த பதில் "அம்மா; அம்மா!" என்பதுதான்.

அதே சமயம் வாசற்கதவு திறக்கும் சத்தம் கேட்டது, சீதாலட்சுமி உள்ளே வந்தாள். கோபு இருந்த நிலையைக் கண்டாள்; ரகுவிடமிருந்த பால் டம்ளரை வாங்கி "கோபு! இதோ பார்! அம்மா வந்துவிட்டேன். பாலைக் குடித்துவிடு!" என்றாள். கோபு கண்ணைத் திறந்து பார்த்தான். "அம்மா!" என்றான். இதயத்திலிருந்து ஏக்கத்தோடு வந்த சொல் அது. பாலை வாங்கி மடமடவென்று குடித்து விட்டான்.

ரகு மௌனமாக வெளியே போனான். இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு திரும்பி வந்தான்.

பொம்மை வைத்து விளையாடிக் கொண்டிருந்த கோபு "அப்பா, நீ வாணும் போ, அம்மாவை அனுப்பிடுவே, நீ போ!" என்றான்.

"இல்லேடா கண்ணு, இனிமே அம்மாவை எப்போதுமே அனுப்பறதில்லை" என்றான் ரகு.

ரகு கூப்பிடாமலேயே சீதாலட்சுமி ஏன் வந்தாள்? அவளுக்குள்ள குழந்தை பாசம் இவனுக்குத் தெரியுமா?

# ஸ்வீகாரம்

**சு**ப்பிரமணிய சாஸ்திரிகள் கதவைத்தட்டிக் கொண்டே "அய்யர்வாள்!," "அய்யர்வாள்!" என்று கூப்பிட்டார். சிறிதுநேரத்திற்குப் பின் கதவு திறக்கப்பட்டது. ஒரு சிறிய துண்டைக் கட்டிக்கொண்டு காட்சியளித்தார் வேங்கடராமய்யர். கண்கள் கலங்கியிருந்தன. உடலில் வியர்வை முத்து முத்தாய் அரும்பிக் கொண்டிருந்தது.

"சமையல் நடக்கிறாப்போலிருக்கிறது!" என்றார் சாஸ்திரிகள்.

தலையசைப்பால் அதை ஆமோதித்துவிட்டு "என்ன விசேஷமாக வந்தீர்கள்?" என்றார் அய்யர்.

"ஒன்றுமில்லை, கோயிலுக்குப் போய்விட்டுத்திரும்பி வருகிறேன். பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். நடக்கட்டும், நான் வருகிறேன்."

"சரி"

"வயசான காலத்தில் ஏன் இந்தக் கஷ்டம்? நானும் எவ்வளவோ தடவை சொல்லி விட்டேன். பிறகு உங்களிஷ்டம்" என்று சொல்லிக்கொண்டே நடந்தார் சாஸ்திரி.

"இப்படியும் கஷ்டப்படவேண்டும் என்று தலைவிதி யிருந்தால் கஷ்டப்பட்டுத் தானே யாகவேண்டும்" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்று சமையல் வேலையிலீடுபட்டார் அய்யர்.

*  *  *

வேங்கடராமய்யர் பெரிய நிலச்சுவான் தார். பரம்பரையாக வந்த சொத்தே ஏராளம். இவராகச் சம்பாதித்தவைகளும் நிறைய இருக்கின்றன. கொஞ்சகாலத்திற்குமுன் குழந்தை இல்லையே என்ற கவலைமட்டும்தான் இருந்தது.

இதே கவலையினால் மனைவியும் இறந்தாள். அய்யர்வாள் இப்பொழுது தனிக் கட்டை. வயது ஐம்பத்தொன்பதுதான். ஆள் வாட்ட சாட்டமா யிருப்பார். வயது நாற்பது மதிக்கலாம். பளபளப்பான மேனி. பரம வைதீகம். சொந்தச் சமையலில் நாளைக் கடத்துகிறார்.

*  *  *

செல்லம் கண்ணாடியின் முன்நின்று அரை மணி நேரமாகத்தான் தலைசீவிக் கொள்ளுகிறாள். வகிடு சரியாக வரமாட்டேனென்கிறது போல் தோன்றுகிறது! இவள் இப்படி அவஸ்தைப்பட்டு அழகுபடுத்திக் கொண்டிருக்கும் பொழுது பின்னாடியே வந்த ரமா அவள் முதுகில் மெதுவாகத் தட்டினாள். படீரென்று திரும்பினாள் செல்லம். "என்னடி?" என்று கேட்டாள் எரிச்சலாக.

"ஓஹோ! தேவி அழகு படுத்திக் கொள்கிறாப் போலிருக்கிறது! மாப்பிள்ளையைப் பார்க்கவா?"

"ஆமாண்டி, மாப்பிள்ளையைப் பார்க்கத் தான். செத்த இறேண்டி வந்துட்றேன்!"

அப்புறம் அரைமணி நேரத்திற்குப் பின்னர்தான் அலங்காரம் முடிந்தது!

"அடி ரமா! இப்பொ எங்க அத்தை பிள்ளை வருகிறாரடி!"

ஆனந்தம் முகத்தில் தாண்டவமாடியது. உள்ளத்தில் பொங்கும் உவகையோடு சொன்னாள் இதை.

"ஓஹோ! 'மாப்பிள்ளையைப் பார்க்கத் தான்!' என்று சொன்னாயே, அது விளையாட்டுக்கு என்றல்லவா நினைத்தேன். மாப்பிள்ளை வருவது உண்மைதானா?" என்றாள்.

"என்னடி கேலி வேண்டியிருக்கிறது?"

"கேலியா, அப்படின்னாலே என்னான்னு எனக்குத் தெரியாதேடி அம்மா!"

"ஓஹோ!" என்று பழிப்புக் காண்பித்தாள் செல்லம்.

"இனிமேல் பொழுது போவதற்கு நாங்கள் வரவேண்டியதில்லை!"

"தானாகவே போய்விடுமோ?"

"உல்லாசமாகக் கூடப்போகுமே!"

மேலும் சிறு பெண்கள் பேசிக் கொண்டிருப்பதை நாம் கேட்டுக் கொண்டிருப்பானேன்?

*　　　*　　　*

ராமசாமி அய்யர் பெரிய தனவந்தர். அவர் ஒவ்வொரு நிமிஷத்தையும் பணம் சம்பாதிப்பது எப்படி என்று யோசிப்பதிலேதான் செலவழிப்பார். ஆளைப் பார்த்தால் பணக்காரன் என்று சொல்ல முடியாது. நீர்க்காவி ஏறின வெஷ்டி, துண்டு. ஆறுமாதத்திற்கொருமுறை தான் க்ஷவரம். இந்தப் புண்ணியவானின் அருமையான ஒரே குமாரிதான் செல்லம். இவளுக்கு யாரோ ஒரு சினேகிதி ஒரு பவுண்டன்பேனா கொடுத்தாளாம். அதற்கு பவுண்டன்பேனா மை வாங்கவேண்டுமென்று எட்டணா கேட்டாள் செல்லம். "அடி! பைத்தியம். மை வாங்க எட்டணாவா? காலணாவுக்குக் கடுக்காய் வாங்கிக் காய்ச்சுக்கடி!" என்றார் அவள் தகப்பனார். "நீங்கள் மை வாங்க எட்டணா கொடுக்காவிட்டால் போகிறது. எதுக்காக அவளைப் பைத்தியம் என்கிறீர்கள்!" என்று கேட்டாள் அவருடைய சகதர்மிணி.

ராமசாமி அய்யருடைய நிலங்களில் வேலை செய்கிறவன் ஒருவன் தன்னுடைய பிள்ளைக்குக் கலியாணம் செய்யப் போவதாகவும் ஏதாவது பொருளுதவி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருந்தான். கண்டிப்பாக உதவி செய்வதாகவும் மற்ற காரியங்களைக் கவனிக்கும்படியும் சொல்லியிருந்தார் அய்யர்.

ஒருநாள் காலை 10 மணிக்கு அய்யர்வாள் ஒரு "ஹிந்து" பேப்பரைத் தலைகீழாகப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அப்பொழுது வந்து சேர்ந்தான் குடியானவன். நாளைக்குக் கலியாணம் என்றால் வராமலிருப்பானா? கால் மணிநேரம் நின்றான், அரைமணி நேரம் நின்றான். அய்யர் கவலை தோய்ந்த முகத்துடன் பத்திரிகையைப் பார்த்துக்கொண்டிருந்தார். மெதுவாக "சாமி!" என்றான். "என்னடா எழவு! இவ்வளவு பெரிசை அனுப்பித் தொலைச்சுப்பிட்டான். இதற்கு எழவெடுப்பதா உன்னைப் பார்ப்பதா?" என்று திடீரென்று, அவன்மேல் எரிந்துவிழுந்தார். "இவ்வளவு பெரிசாக சர்க்கார் அனுப்பி விட்டார்கள் போலிருக்கிறது! அவர்தான் என்ன செய்வார்?" என்று எண்ணிக் கொண்டே வீடு போய்ச்சேர்ந்தான் குடியானவன். "இனிமேல் இந்தக் காரணத்தைக் கொண்டு பணம் வாங்க முடியுமென்ற நம்பிக்கையே அவனிடமில்லை.

* * *

வேங்கடராமய்யர் சாவகாசமாக உட்கார்ந்து வெற்றிலையை மென்றுகொண்டிருந்தார். வந்து சேர்ந்தார் சுப்பிரமணிய சாஸ்திரிகள். இவர் கலியாணத் தரகராதலால் இவரைத் தெரியாதவர்கள் அனேகமாக பிள்ளைகுட்டி யில்லாதவர்களாகத்தான் இருக்க வேண்டும்.

உலக விஷயங்கள் பலவற்றைப் பற்றி இருவரும் கலந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

"நானும் பலமுறை சொல்லிவிட்டேன், நீங்கள் என் வார்த்தையை......." என்று ஆரம்பித்தார் சாஸ்திரிகள்.

"உங்கள் வார்த்தையைக் கேட்கவில்லை என்றுதானே சொல்கிறீர்கள்? உண்மையிலேயே அவ்விஷயத்தில் எனக்குத் திருப்தியில்லை."

"நீங்கள் சொல்கிற பதில்தான் எனக்குத் திருப்தியாயில்லை. உங்களுக்கு எதிலே குறைச்சல்? பணம் இல்லையா? ஆள்தான் அழகாயில்லையா? வயதுதான்......."

"ஆமாம், வயது இப்பொழுதுதான் பதினெட்டு ஆகிறது! அதெல்லாம் வேண்டாம் சாஸ்திரிகளே."

"அப்படிச் சொல்லக்கூடாது. உங்களுக்கு வயது 18 அல்ல, என்று எனக்குத் தெரியும். ஆனால் உங்களைப் பார்க்கிற யாரும் 35 வயதுக்குமேல் மதித்தால் நான் சாஸ்திரி என்ற பெயரையே எடுத்துக்கொண்டு விடுகிறேன்"

"வயது அவ்வளவுதான் சொல்லலாமோ?"

"சந்தேகமென்ன? மிஞ்சினால் நாற்பது சொல்லலாம், அவ்வளவுதான் அதற்குமேல் ஒருநாளும் ஏறாது. உங்கள் விஷயத்தில் எனக்கு ரொம்பவும் அனுதாபம் உண்டு என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே. தங்களுடைய நன்மையை உத்தேசித்துத்தான் சொல்கிறேன். நீங்களே இப்படி சமையல் செய்துகொண்டு அவஸ்தைப் படுவது எனக்குச் சற்றும் பிடிக்கவில்லை"

"ஒரு சமையற்காரனை வைத்துக்கொள்ளலாமே!"

"அந்தத் தொல்லைதான் எதற்கு? ஓட்டலில்கூடச் சாப்பிட்டுவிடலாமே! இப்படிச் சொல்வீர்களென்று எனக்குத் தெரியுமே. வீடு என்றிருந்தால் பெண் இருக்கவேண்டாமா? பொம்மையை வைத்தா சாந்தி செய்து கொள்வீர்கள்? வீட்டுக்குப் பொறுப்பான ஆள் வேண்டாமோ? இவ்வளவு சம்பத்து உள்ள தாங்கள் ஆனந்தமான வாழ்க்கை யல்லவா நடத்தவேண்டும்"

ஆனந்தமான வாழ்க்கை, ஆனந்தமான வாழ்க்கை என்று வேங்கடராமய்யர் மனசுக்குள்ளேயே இரண்டுதரம் சொல்லிக்கொண்டார். சிறிது நேரம் மௌனமாக இருந்தார். யோசிக்கட்டும் என்று சாஸ்திரிகளும் மௌனமாக இருந்தார் போலும்!

"கலியாணம் செய்து கொள்வது தேவலை என்று சொல்கிறீர்கள்?" என்றார் அய்யர்.

"சந்தேகமென்ன? ஒரு விதத்திலா, பல விதத்திலல்லவா தேவலை"

"அப்படியே வைத்துக் கொள்ளுங்கள்; ஆனால் எனக்கு யாரய்யா பெண் கொடுப்பார்கள்?"

"நன்றாகக் கேட்டீர்கள் ஒரு கேள்வி! பணக்கார வீட்டுப் பெண்ணாக, அழகான பெண்ணாகப் பார்த்துத் தருகிறேன். அவாளாகவே உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறார்களே!"

"அது யாரையா! அவாளா ஆசைப் படுகிறது?"

"நம்ம ராமசாமி இருக்கிறனே, அவன் தன் பெண்ணைத் தங்களுக்கே தரவேண்டு மென்று எண்ணுகிறன்"

"செல்லத்தையா?"

"ஆமாம். வயது பதினறுதான் ஆகிறது"

"அதைப்பற்றி இல்லை, அவ்வளவு சிறிய பெண்ணை நான் கலியாணம் செய்துகொள்வது பற்றி ஊரிலுள்ளவர்கள் என்ன சொல்லமாட் டார்கள்? மனசுக்கு அவ்வளவு திருப்தியா யில்லை"

"நல்ல வார்த்தை! ஊரிலுள்ளவர்கள் எதற் கும் எப்பொழுதும் ஏதாவது சொல்லிக் கொண்டேதான் இருப்பார்கள். கலியாணம் செய்துகொண்டால் ஊரிலுள்ளவர்கள் தூற்று வார்களோ என்று யோசிக்கிறீர்களாக்கும். இப்பொழுது என்ன சொல்கிறர்கள் தெரி யுமா? 'கஞ்சப்பயல் கலியாணத்தைச் செய்து கொண்டு ஆனந்தமாக இருந்தால் என்ன? ஏன் இப்படி அவஸ்தைப் படுகிறன்' என்கிறர் கள்"

"உண்மைதான், ஊரிலுள்ளவர்கள் அப் படியும் பேசுவார்கள்."

"ஊரைப்பற்றிக் கவலைப்படுவது எனக் குச் சற்றும் பிடிக்கவில்லை. நீங்கள் சரி என் ருல் ராமசாமியிடம் பேசி ஏற்பாடு செய்கி றேன்"

"சரி" யென்று வேங்கடராமய்யர் வாய் விட்டுச் சொல்லி விடவில்லை.

"நீங்கள் ஒன்றுக்கும் சிரமப்படவேண்டாம். ஆகவேண்டியதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று கூறிவிட்டுக் கிளம்பினார் சாஸ்திரிகள்.

*　　　　*　　　　*

ராமசாமி அய்யருடைய தங்கை பிள்ளை சுந்தரம். சுந்தரம் என்று பெயர் வைக்கும் பொழுது அவன் இவ்வளவு அழகாக வருவான் என்று எதிர் பார்த்திருக்க மாட்டார்கள்தான். படிப்பிலோ மகா கெட்டிக்காரன். சென்னையில் படிக்கிறான். ஆனால் அதிருஷ்டம் என்பது மட்டும் அவனை முழுக்க முழுக்க ஏமாற்றி விட்டது. பால்யத்திலேயே தாய் தந்தையரை இழந்து விட்டான். அவர்கள் இருந்துதான் என்ன உபயோகம்? இருந்திருந்தால் சுந்தரத்தைப் போல ராமசாமி அய்யரை அண்டிப் பிழைக்க வேண்டிய நிலைதான் ஏற்பட்டிருக்கும். ஒருவேளை அவர்கள் இருந்திருந்தால், சுந்தரத்துக்குச் சாப்பாடுபோட்டுப் படிக்க வைக்கும் பொறுப்பைக்கூட ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார் இவர்.

செல்லமும் சுந்தரமும் அந்நியோன்யமாகப் பழகிவிட்டார்கள். அவர்களிடையே மாசற்ற அன்பு நிலவியது. திருமணத்தில் முடியவேண்டிய காதலாகத்தான் பரிணமித்தது. அவனுக்கும் அவளுக்கும் என்று பிர்மா முடிபோட்டு விட்டதாக செல்லத்தின் தாயார் எண்ணியிருந்தாள்.

சென்னையிலிருந்து சுந்தரம் வந்துவிட்டான். நாலு நாளைக்கப்புறம் சுந்தரமும் செல்லமும் தோட்டத்திலே பேசிக்கொண்டிருந்தார்கள்.

" கலியாணத்திற்கு ஏற்பாடு நடந்துகொண்டிருக்கிறது" என்று மகிழ்ச்சியோடு சொன்னுள் செல்லம்.

"யாருக்கு ?" என்ருன் சுந்தரம்.

"எனக்குத்தான் !"

"மாப்பிள்ளை யாரோ ?"

"கேலி, கேலியா செய்கிறீர்கள்? மாப்பிள்ளை இவர்தான்" என்று சொல்லி அவன் கன்னத்தைத் திருகினுள்.

அவன் முகத்திலே புன்னகை தவழ்ந்தது. ஆனுல், தவழ்ந்த புன்னகை உடனே மறைந்தது. வெளுமை படர்ந்த முகத்துடன் யோசித்தவாறே நின்ருன் சுந்தரம்.

"என்ன, அதற்குள் கவலை வந்துவிட்டது ?" என்ருள் செல்லம்.

"கவலையா ?....ஒன்றுமில்லை."

"ஒன்றுமில்லாவிட்டால் ஏன் இப்படி முகத்தை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள் ?"

சுந்தரம் பதில் பேசவில்லை; மௌனம் சாதித்தான்.

"இதுதானே எனக்குப் பிடிக்கிறதில்லை!" என்ருள செல்லம்.

"எது ?"

"இப்படிச் சமயம் தெரியாமல் 'உர்' ரென்றிருப்பதுதான் !"

சிறிது நேரம் கழித்து, "சமயம் தெரிந்து தான் இப்படியிருக்கிறேன். இந்தச் சமயத்தில்தான் உன்னை ஒன்று கேட்கவேண்டும்" என்றான்.

"என்னவோ அது ?"

"மாமா யாரிடமாவது உன்னை எனக்குக் கலியாணம் செய்து கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறாரா ?"

"சொல்லாவிட்டால் ?—அம்மா சொல்லியிருந்தால் போதாதோ ?"

"இல்லை, செல்லம்! உனக்கு உன் அப்பாவின் எண்ணம் தெரியவில்லை"

"அம்மாவை இல்லாமல் அப்பா என்ன செய்துவிடுவார் ? என்னை இல்லாமல்தான் அவர் என்ன செய்யமுடியும் ?"

சுந்தரத்துக்கு இதனாலெல்லாம் நம்பிக்கை பிறக்கவில்லை. அவன் ஏற்கனவே தன் மாமாவிடம் சிறிது சிறிதாக ஏற்பட்டுவரும் மாறுதல்களைக் கவனித்து வந்திருக்கிறான்.

"அப்படியானால் அப்பாவின் எண்ணந்தான் என்ன ? உங்களுக்குத்தான் தெரியுமே, சொல்லுங்களேன்!" என்றாள்.

"எனக்கு உன்னைக் கொடுக்கும் விஷயத்தில் அவருக்குச் சம்மதமில்லை."

"ஏன்?"

"என்னிடம் பணம் இல்லை"

"அவரிடந்தான் நிறைய இருக்கிறதே!"

"அதனால்தான் கொடுக்கமாட்டார்!"

தன்னுடைய கனவுகளில் தான் வைத்திருந்த நம்பிக்கை அப்போதுதான் சோதனைக்குள்ளாக்கப் படுவதைச் செல்லம் அறிந்தாள். அவனுடைய முகத்தை சில நிமிடங்கள் கண் இமைக்காமல் பார்த்துவிட்டுக் கனத்த நெஞ்சோடு வீடு நோக்கிப் புறப்பட்டாள். அவளையே பார்த்துக்கொண்டு அசையாமல் உட்கார்ந் திருந்தான் சுந்தரம்.

செல்லம் தாழ்வாரத்தின் பக்கமாகச் சென்றாள். அம்மாவும் அப்பாவும் ஏதோ காரசாரமாகப் பேசிக்கொண்டிருந்தது கேட்டது. அப்படி என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று காது கொடுத்துக் கேட்கலானாள்.

"இதைவிட அவளை ஒரு கிணற்றில் தள்ளிக் கொன்றுவிடலாம்." இது அம்மாவின் குரல்.

யாரைக் கிணற்றில் தள்ளிக் கொல்லலாமென்கிறாள்? உட்கார்ந்துவிட்டாள் செல்லம்; மேலும் அவர்கள் பேசுவதைக் கேட்பதற்காக.

"பயப்படாதே, உன் பெண்ணுக்கு ஒரு குறையும் வராது. வேங்கடராம அய்யருக்கு வயது ஒன்றும் அதிகமாகிவிடவில்லை. தங்கமானவர். ஏராளமான பணம்; செல்லத்தைச் செல்வமாக வைத்துக்கொள்வார்."

செல்லம் மயக்கம்போட்டு விழுந்துவிடாம லிருப்பதற்காகச் சுவரில் சாய்ந்துகொண்டாள். தந்தையின் வார்த்தை இடி போலிருந்தது அவளுக்கு.

"சுந்தரம் அவளைச் சரியாக வைத்துக் கொள்ளமாட்டானு? அவனுடைய பிரியத்துக் குத்தான் என்ன? அழகுக்கென்ன? புத்தி சாலித்தனத்துக்கென்ன?"

"எதற்குத்தான் என்ன? பணத்திற்குத் தான் தாளம்!"

"பணம்! பணம்! பணம்தான் உங்களுக்குக் குறி. பணத்திற்காக என்னுடைய பெண்ணை அநியாயமாகப் பலியிடாதீர்கள். அந்தக் கிழட் டுப் பிணத்துடன் என் செல்லம் ஒருநாள்கூட வாழ்ந்திருக்கமாட்டாள். அவள் சந்தோஷமாக இருக்கவேண்டுமென்று ஆசைப்பட்டால் இந்த ஏற்பாட்டைச் செய்யாதீர்கள்."

"சந்தோஷமாக இருக்கவேண்டுமென்று தானேடி இந்த ஏற்பாட்டைச் செய்கிறேன்! பணம் இல்லாதவனிடம் பணத்தைக் கொடுத் தால் செலவழிக்கத்தான் பார்ப்பானே தவிர அவனுக்குச் சேர்க்கத் தெரியாது. சுந்தரத்தை நினைப்பதை விட்டு விடு."

இதோடு சம்பாஷணை முடிந்தது.

ராமசாமி அய்யர் தோட்டத்துப் பக்கம் வந்தார்.

"ஏண்டா சுந்தரம், பட்டணத்துக்கு எப் பொழுது போகப்போகிருய்?"

"இன்னும் நாலுநாள் ஆகும், மாமா?"

"அங்கே ஒருவரிடம் முக்கியமான விஷயம் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்றைக்குப் புறப்பட்டுப்போனால் என்ன? **லீவை அங்கேயே சந்தோஷமாய்க் கழித்துவிடுகிறது.**"

அங்கேபோய் சந்தோஷமாய் விடுமுறையைக் கழிப்பது எப்படி என்பது அவனுக்குத் தெரியவில்லை.

எப்படியோ மாமா சுந்தரத்தைக் கிளப்பி விட்டார்!

தகப்பனாரின் கண்முன் நிற்பது பணம் தான். தாயின் சொல் அங்கே ஏறவில்லை. அப்படி யிருக்கையில் அவளே அவரிடம் நேரடியாகப் பேசித்தான் பலனென்ன? இதற்கு என்ன தான் செய்வது?.....யோசனை கேட்போமென்றால் சுந்தரத்தையும் அப்பா சென்னைக்குத் தள்ளிவிட்டாரே!—வெகுநேரம் யோசித்தாள்; பின் ஒரு முடிவுக்கு வந்தாள்.

மாலை ஏழு மணியிருக்கும். வேங்கடராமய்யரின் வீட்டுக்குள் விர்ரென்று நுழைந்தாள் செல்லம். எதிரே ஊஞ்சலில் உட்கார்ந்து வெற்றிலைப் பெட்டியைத் திறந்து கொண்டிருந்தார் வேங்கடராமய்யர்.

"நீங்கள் தானே என்னைக் கலியாணம் செய்துகொள்ளப்போகிற புது மாப்பிள்ளை?" என்றாள் செல்லம். அவளுடைய குரல் அவரை நெஞ்சின்மீது அறைவதுபோ லிருந்தது.

பிரமித்துப்போய் அப்படியே உட்கார்ந்

தார் அய்யர். அவருடைய வாய் அடைத்து விட்டது.

அவரெதிரில், நின்றுகொண்டே செல்லம் அவரிடம் கேள்விகளின் மேல் கேள்விகளாகச் சொரிந்து கொண்டிருந்தாள். ஒன்றிற்கேனும் பதில் வரவேண்டுமே!

கேள்விகளெல்லாம் பயனற்றுவிட்டன. அவளுடைய வீராவேசம் விம்மலாக மாறிற்று. அய்யரின் கால்களைப் பற்றிக்கொண்டு கதறினாள். கண்ணீர் அருவியால் அவரது பாதங்களை நனைத்தாள்.

அவள் அவருடைய வீட்டிலிருந்து திரும்பும் போதும் வேங்கடராமய்யர் அதேமாதிரித் தான் கல்லாய்ச் சமைந்து உட்கார்ந்திருந்தார். அவருடைய உடம்பில் உயிர் இருப்பதற்கான அறிகுறிகள் ஒன்ருவது கிடையாதோ என்று சந்தேகப்படும்படியாக இருந்தது.

* * *

கல்யாணத்திற்கு முகூர்த்தம் வைப்பதற்காக ராமசாமி அய்யர், சாஸ்திரிகள் முதலியோர் வேங்கடராமய்யர் வீட்டுக்கு வந்தனர்.

"எப்பொழுது முகூர்த்தம் வைத்துக் கொள்ளலாம்?" என்ருர் சாஸ்திரிகள்.

"ஆவணி 25-ல் ஒரு நல்ல முகூர்த்தம்" என்ருர் வேங்கடராமய்யர்.

"பத்திரிகை எழுதுங்கள்!" என்ருர் ராமசாமி அய்யர்.

சாஸ்திரிகள் எழுதினர். மணமகன் பெயர் எழுதவேண்டிய இடம் வந்தது. வேங்கட ராமய்யர் சொன்னர்: "சாஸ்திரிகளே, வேங்கடராமய்யருடைய ஸ்வீகார புத்திரன் சுந்தரத்துக்கு என்று எழுதுங்கள்."

"என்ன?" என்று இருவரும் ஏக காலத்தில் கேட்டனர்.

"என்னுடைய பிள்ளைக்குத்தான் கலியாணம்."

"உங்கள் பிள்ளையா?"

"ஆமாம் என்னுடைய பிள்ளைதான், சுந்தரம்."

"அவன் யார், சுந்தரமென்பது?"

"ராமசாமி அய்யருடைய மருமகன் சுந்தரத்தைத் தான் நேற்று ஸ்வீகாரம் செய்து கொண்டேன். என்னுடைய ஆஸ்தியெல்லாம் அவனுக்கே எழுதிவைத்து விட்டேன். அவனுக்குத்தான் கல்யாணம்."

பதில் சொல்லத் தெரியாமல் இருவருமே சற்று மௌனமாக இருந்தார்கள்.

கல்லுப் பிள்ளையார்போல் ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்த அந்த மாமாதாஞ இப்படிப் பேசுகிருர் என்று பூரிக்கும் உள்ளத்தோடு கதவருகில் நின்றுகொண்டு உற்றுக் கேட்டாள் செல்லம்.

# ராக்காயி

ராக்காயிக்கு இரவு பன்னிரண்டு மணியிலிருந்து கடுமையான குளிர் ஜுரம். என்னென்னவோ பிதற்றுகிறாள். ஜுரம் அவளைத் தூக்கித் தூக்கிப் போடுகிறது. அவள் புருஷன் சோணைமுத்து அவளை மடிமீது சாய்த்து இருகப் பிடித்துக்கொண்டிருந்தான். இந்த அர்த்த ராத்திரியில் அவளை விட்டுவிட்டு எப்படி வெளியே போகமுடியும்? அடுத்த வீட்டுக்காரர்களைத்தான் எப்படி எழுப்புவது? பண்டித சின்னான் வீடும் அருகாமையிலா? இரண்டு கல் போகவேண்டுமே. அப்படியே போனாலும் சின்னானை எழுப்பமுடியுமா என்ன? இவன் பணம் கொடுக்கிறது என்ன கெட்டுப் போகிறது? பணம் கொடுத்து மருந்து வாங்க சக்தியிருந்தால் எப்பொழுது போனால்தான் என்ன? அவனுடைய மனோ வேதனையை அளவிட்டுச் சொல்லமுடியாது. என்னென்னவே எண்ணித் தவித்தது அந்த ஏழை மனம். "ராக்காயி! கொஞ்சம் பொறுத்துக்க, விடியட்டும். வைத்தியங்கிட்ட போய் வரேன்." என்றான். ஜுரவேகத்தில் சோணைமுத்து சொன்னது அவள் காதில் விழுந்ததா? அவள் பிதற்றல் அதிகப்பட்டுக்கொண்டுதான் இருந்தது. "ஐயோ, ஜன்னி கண்டால்தானே வாய் பிதற்றும் என்று சொல்வார்கள்"

என்பதாக மனதிற்குள் எண்ணிக் கொண்டான் சோணைமுத்து. அப்படி நினைத்ததும் அவன் உடல் நடுங்கியது. "காளியாத்தா! நீதாண்டியம்மா காப்பாத்தணும்" என்று வேண்டிக் கொண்டான். இன்னும் எல்லா சாமிகளையும் நினைவுபடுத்திக்கொண்டான்.

ராக்காயிக்கு என்னமாவது நேர்ந்துவிட்டால்.........இதை எண்ணும்பொழுது அவன் இருதயம் வெடித்துவிடும்போலிருந்தது.

சோணைமுத்து பெரிய பண்ணை தங்கசாமிப் பிள்ளையிடம் வேலைக்கிருக்கிறான். மாச சம்பளம் நாலு ரூபாயும் 26 படி நெல்லுந்தான். ராக்காயியும் களை பிடுங்கி நாற்று நட்டு ஏதோ கொண்டுவருவாள். இப்படிக் கவலையற்று ஓடிக் கொண்டிருந்த அந்தக் குடும்பத்திற்கு ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என்று எண்ணும் போது அவனுக்கு இடிவிழுந்தமாதிரி தோன்றுவதில் ஆச்சர்யமென்ன? சோணைமுத்துவுக்கு ஒரே ஒரு மனைவிதான்! எல்லாருக்கும் ஒரே மனைவிதானே என்று கேட்கலாம். உண்மைதான். தங்கசாமிப் பிள்ளைக்கு இப்பொழுதிருப்பது மூன்ருவது தாரம். மூந்தின இரண்டு தாரங்கள் பரலோகமடைந்துவிட்டன. அவருக்கு ஒன்று போனல் இன்னொன்று வரக் காத்திருக்கிறது. அவருக்கு வயது நாற்பத்தைந் தானலும் புதுப் பெண்ணாக வருகிறவளுக்குப் பதினைந்து வயதுக் குள்ளாகத்தானே இருக்கும். அவர் ஒரு கலியாணம் செய்ய இரண்டாயிரம் செலவு செய்யலாம். சோணை முத்துவினுடைய கலியா

ணத்திற்கு இருநூறு ரூபாய்தான் செலவு. தங்கசாமிப்பிள்ளை இரண்டாயிரம் ரூபாயை லாபத்திலிருந்து செலவு செய்தார். சோணை முத்தோ தன் பாட்டன் சொத்தை விற்றுத் தான் கலியாணம் செய்துகொண்டான். மறு கலியாணம் செய்ய பணத்திற்கு என்ன செய்வது என்ற கவலையே சோணைமுத்துக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. அந்த அன்பான மனைவியைப் பிரிந்து எப்படிக் காலங் கழிப்பது என்று தான் கவலைப்பட்டான். காதல் காதல் என்று சொல்கிறார்களே அதெல்லாம் அவர்களுக்குத் தெரியாது. ஆனால் உண்மையான காதல் அவர்களிடம்தான் நிலவியது. அவள்மீது அவன் வைத்திருக்கும் அபரிமிதமான அன்பினால்தான் அவளுக்கு ஆபத்து நேர்ந்துவிடுமோ என்று அஞ்சுகிறான். தான் அதிக அன்பு செலுத்தும் பொருளுக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று அவசியமில்லாதபோதெல்லாம் வீணைகக் கவலைப் படுவதுதானே மனித குணம்.

எப்பொழுது விடியும் விடியும் என்று எதிர்பார்த்துக்கொண் டிருந்தான் சோணை முத்து. விடிந்துவிட்டது. சோணைமுத்துவின் வேண்டுகோளுக் கிசைந்து அடுத்தவீட்டுக் காரியும் வந்து சேர்ந்தாள். "அம்மா! கொஞ்சம் பார்த்துக்குங்களேன். வைத்தியர் வீட்டுவரைக்கும் போய்ட்டு வந்துடறேன்" என்றான். அவளும் "சரி" என்றாள்.

முண்டாசை இறுக்கிக் கட்டிக்கொண்டு சாக்குப் போர்வையுடன் வெளியே வந்தான்.

பத்தடிகூட நடந்திருக்கமாட்டான். "முத்தண்ணேன்!" என்ற குரல் கேட்டு ஏறிட்டுப் பார்த்தான். பெரிய பண்ணைவீட்டுப் பையன் நின்றிருந்தான். "ஏண்டாலே, என்ன?" என்றான் சோணைமுத்து.

"எசமான் உன்னைக் கையோடே கூட்டியாரச் சொன்னாரு. ரொம்ப அவசரமாம்." என்றான்.

"என்னடா இது? பொஞ்சாதிக்கு சுரம் வேகமாய்க் காயுது. வைத்தியங்கிட்டே போவணும்."

"அதென்னமோ அண்ணேன், சொல்லிப்புட்டேன், ரொம்ப அவசரமுண்ணாரு"

முதலாளி கூப்பிட்டுப் போகாமலிருப்பதா? என்னதான், பெண்டாட்டிக்குச் சுரமாயிருந்தாலும் சொல்லாமல் இருந்துவிட்டால் கோபித்துக்கொள்ள மாட்டாரா? மறுநாள் போய் "நேற்று மனைவிக்கு சுரம் ஆதலால் வரமுடியவில்லை" என்று சொல்லக்கூடிய அவ்வளவு பெரிய உத்தியோகமா அவன் பார்க்கிறான்? பண்ணையார் வழக்கம்போல அடித்துவிட்டாலும் பரவாயில்லை. வேலையிலேயே மண்ணைப் போட்டுவிட்டாரானால் என்ன செய்வது? சொல்லிவிட்டு வந்துவிடுவோம் என்று வைத்தியர் வீட்டுக்குப் போக நினைத்தவன் முதலாளி வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

தங்கசாமிப்பிள்ளை அவனைப் பார்த்தவுடன், "டேய் சோணை! அவசரமா பெரிய மேட்டுக்குப் போய் மேலவீட்டுப் பண்ணயத்

தாருகிட்டே கருராச் சொல்லிப்பிடு. வாய்க் காத் தண்ணியை இப்பவே துறந்துவிட்டா ஆச்சு, இல்லேன்னு வீணு கலகம் வரும்னு சொல்லிப்பிடு, உம், உடனே புறப்படுடா!" என்ருர்.

பெரியமேடு நாலு மைலிலுள்ள ஊர்.

"சாமி!"

"என்னடா?"

"ராக்காயி குட்டிக்கு சுரம். ரொம்ப சுரங்க, தூக்கித் தூக்கி...."

"என்னடா சுரம்! ஆரம்பிச்சுட்டியா, உங்க எழவு இதுதாண்டா, ஒரு காரியத்துக்குப் போகச் சொன்னு...."

"வைத்தியருக்கிட்ட மருந்து வாங்கிக் குடுத்துட்டு அப்புறம்...."

"அடி செருப்பாலே, கழுதை, சொல்றேன், அப்புறம் போராரும்; தொரை. போடா நாயே!"

அந்த நாய்க்கு அதற்குமேல் அங்கே நிற்க என்ன யோக்கியதை இருக்கிறது?

பெரியமேட்டை நோக்கிப் புறப்பட்டான். ராக்காயி சுரத்தால் படும் அவதி கண்முன்னே நிற்கிறது. அதற்கடுத்து முதலாளியும் எமன் வேஷத்தில் தோன்றி மிரட்டுகிருர். நடையும் ஓட்டமுமாக வந்து சேர்ந்தான். மேலவீட்டுப் பண்ணயத்தாரைக் கண்டு வாய்க்காலைத் திறந்துவிடும்படியாகச் சொன்னுன். அவரோ,

திறக்க முடியாதென்றும் தெரிந்ததைப் பார்த்துக் கொள்ளும்படியும் சொல்லிவிட்டார்.

பெரிய மேட்டுப் பண்ணையத்தார் எப்படி முன் கோபக்காரரோ அப்படித்தான் தங்கசாமிப் பிள்ளையும். கலகம் வந்தாலும் வந்துவிடும் என்று சோணை முத்து பயந்தான். அவர்கள் எப்படியாவது அடித்துக்கொண்டு தொலையட்டும். நம்மை விட்டால் போதும் என்றுதான் அவன் எண்ணினன்.

"போகச் சொன்னவுடன் போகாமல் சகுனத் தடையாகப் பேசியதால் தான் கலகம் வந்துவிட்டது" என்று தங்கசாமிப் பிள்ளை சொல்வாரோ, என்ற பயமும் அவனைப் பிடித்துக் கொண்டது.

எப்படியோ பகல் பதினேரு மணிக்கு வந்து சேர்ந்தான். முதலாளி வாசலில் நின்றிருந்தார். "எஜமான், அவுங்க, வாய்க்காலைத் துறக்க...." அவன் சொல்லி முடிப்பதற்குள், "டேய், சோணை, அம்மாவைப் பாம்பு கடிச்சுட்டுதடா, வண்டியைக் கட்டுடா, பூசாரி கிட்ட போவோம். ஐயோ ஓடுடா." என்ருர் பரிதாபகரமாக. உள்ளே எட்டிப் பார்த்தான் சோணை. ஒரே அல்லோலகல்லோலமாக இருந்தது. உடனே ஓடிப்போய் வண்டியைக் கட்டிக் கொண்டு வந்தான்.

எஜமான் பெண்டாட்டியைப் பாம்பு கடித்திருக்கும் பொழுது, அந்த ஏழை சோணை தன் பெண்டாட்டியைப் பற்றி நினைக்க என்ன உரிமை இருக்கிறது?

சோணை வண்டியை வேகமாக ஓட்டினன். தன் மூன்ருவது மனைவியைத் தோள்மேல் சாய்த்துக் கொண்டு யோசித்த வண்ணமிருந் தார் தங்கசாமிப் பிள்ளை.

காலஞ் சென்ற இரண்டு மனைவிகளைவிட இவள் பேரில்தான் பண்ணையாருக்கு ரொம்ப அபிமானம். பதிஞறு வயதுதான். பெரிய இடத்து சம்மந்தம். இவளுக்கும் ஏதாவது நேர்ந்துவிட்டால், பெரிய பண்ணையாயிருந்தால் தான் என்ன, "தோசிப் பயலுக்கு" யார் தான் பெண் கொடுப்பார்கள்? இப்படியெல் லாம் யோசிக்க ஆரம்பித்து விட்டார். குடல் பற்றி யெரிவது போலிருந்தது. உடல் நடுங்கி யது. மனைவி எமனேடு போராடிக் கொண் டிருக்கும் பொழுது எப்படியெல்லாம் உள்ளம் பதருது? கண்கள் நீரைக் கக்கின.

"சோணை முத்து!" என்று கூப்பிட்டார். அவன் திரும்பிப் பார்த்தான். கண்களில் நீர் கசிந்து கொண்டிருந்தது. அவனுடைய முகத் தோற்றம்—பேயடித்தது போன்றிருந்த அந்த பயங்கரமான முகத்தோற்றம்தான் தங்க சாமிப் பிள்ளையின் இரும்பு இதயத்தை இடித் தது. "அவன் பெண்டாட்டிக்கு சுரம் என்று சொன்னனே. அதைக் கூடக் கவனிக்காமல் அவனைப் பெரிய மேட்டுக்கு அனுப்பினேமே. அந்தப் பாவம் தானு இப்படி மூண்டிருக் கிறது?" என்று எண்ணினர்.

"சோணைமுத்து! பூசாரி வீடுவந்து விட்டது, நிறுத்து" என்ருர். ராக்காயி நினைவிலிருந்து விடுபட்டு வண்டியை நிறுத்தினன் சோணை.

பூசாரி மந்தரித்தான்.

மறுபடியும் புறப்பட்டார்கள். "சோணே! வண்டியை வேகமாக விடு" என்ருர். தட்டி விட்டான். பறந்து சென்றது வண்டி.

"சோணே! ராக்காயிக்கு சுரம்னு சொன்னுயேடா, அதைக் கவனிக்காமே உன்னைப் பெரிய மேட்டுக்கு அனுப்பினேனே, என் மனசு என்னமோ பண்ணுதுடா. பாவம்! எங்களை இறக்கி விட்டுட்டு வண்டியிலேயே போய்ப் பாருடா. செலவுக்கு இந்த அஞ்சு ரூபாயை வைச்சுக்கோடா. இதை இனுமா வைச்சுக்க" என்ருர். இந்தப் பதறிய உள்ளத்தை இப்படியாவது சாந்தி செய்யலாமா என்று பார்த்தார் போலும்!

தங்கசாமிப் பிள்ளைக்கும் இதயம் இருக்கிறதென்று சோணேமுத்து இப்பொழுதுதான் கண்டான். கைகள் நடுங்க ஐந்து ரூபாயை வாங்கினன்.

தங்கசாமிப் பிள்ளையின் மனதிலிருந்த பெரும் பாரம் இறங்கியது. சாந்தி ஏற்பட்டது.

வண்டியின் பூட்டைத் தறித்துவிட்டு சோணேமுத்து தன்வீட்டைப் பார்க்க ஓடினன். என்ன ஓட்டம். வீட்டு வாயிற்படியிலிருந்து இதைப்பார்த்த பண்ணையார் "எவ்வளவு கொடியவனக நடந்து கொண்டோம்?" என்று எண்ணினர்.

# விதியின் விளையாட்டு

ஊர் வதந்திக்கு சமாதானம் சொல்ல முடியுமா? அதற்கு அணை போடத்தான் நம்மால் இயலுமா? அண்டை வீட்டு விஷயத்தைப் பேசுவதென்றால் சிலருக்கு ரொம்பப் பிடிக்கும். ஜனங்களின் போக்கே விசித்திரமானது! ஒரு செய்தி இரண்டு கைமாறி மூன்றாவது நபரிடம் போகும்போது அதன் உருவமே மாறி, அதற்குக் கைகால்கள் முளைத்துவிடுவது சர்வ சாதாரணம்! இதற்கு **அவள்** மட்டும் விதிவிலக்கா?

அவள் விபசாரி என்பதாக ஊரே பேசிற்று. நாலுபேர் கூடினால் இதுதான் பேச்சு. பெண்களுக்குப் பேசுவதற்கு விஷயம் கிடைத்துவிட்டது. ஆங்காங்கு இதே கதைதான். அவள் கெட்டழிந்த கதையைப் பலவாறாக—அவரவர்களுக்குத் தோன்றியவாறெல்லாம் வர்ணிக்கத் தொடங்கிவிட்டார்கள். இவ்வாறு ஊரால் தூற்றப்படுகின்ற அவளின் உண்மை நிலைதான் என்ன?

* * *

ராமநாதனுடைய வீட்டில் அன்று விசேஷம். வீட்டில் என்ன, விசேஷமே அவனுடையதுதான். அருமையான குமாரனுக்கு ஐந்து வயது நிரம்பிப் பள்ளிக்கு வைக்கும்

சுபதினம். ஊரார், உறவினர் எல்லாரும் கூடி யிருக்கின்றனர். இது சிறிய சடங்குதான்; என்றாலும் பெரிய இடத்துக் காரியமாகையால் பலரும் கூடியிருப்பதில் ஆச்சரியமில்லை.

ராமநாதனின் குடும்பம் பரம்பரையாகவே பணம் படைத்தது. பெரும் பணமல்ல, ஏதோ இரண்டு லட்சம் தேறும். ராமநாதனும் நல்ல பிள்ளை என்பதாக ஊராரிடம் நன்மதிப்புப் பெற்றவன். மூத்தபிள்ளை யாகையால் பள்ளிக்கு வைக்கும் சடங்கு விசேஷமாகவே கொண்டாடப்பட்டது. எல்லாரும் ஆனந்தத் தோடுதான் இருக்கிறார்கள். ஆனால் ராமநாதன் முகத்திலே களை இல்லை. சாதாரண நாளில் கூட அவன் மகிழ்ச்சியோடு காணப்படு வான். இந்த விசேட தினத்தில் இவ்வளவு கவலையுடன் இருப்பானேன்? அவன் கவலை யோடிருக்கிறான் என்பதைப் பிரஸ்தாபித்து, அந்தக் கவலைக்குத் தங்களுக்குத் தோன்றிய வாறெல்லாம் காரணங்கள் கண்டுபிடிக்க ஆரம் பித்தனர், விழாவுக்கு வந்திருந்த ஜனங்கள். அதுதானே மனித இயற்கை!

ராமநாதனின் அளவுமீறிய கவலைக்கு அடிப்படை பாழாய்ப்போன ஷேர் மார்க்கட்டு தான். ஷேர் மார்க்கட் என்ன செய்தது? கேளுங்கள் அந்த அநியாயத்தை. யுத்தம் காரணமாகப் பங்குகள் விலை ஏற ஆரம்பித் தன.சிலர்பங்குகளை வாங்கிவைத்ததன் காரண மாகக் கொஞ்சம் லாபமடைந்தார்கள். ஏதோ கொஞ்சம் லாபம், பலர் வாயிலும் புகுந்து புகுந்து கடைசியில் பெருந்தொகையாகப்

பேசிக்கொள்ளப்பட்டது. எல்லாருக்கும் நாக்கில்நீர் ஊறுவது சகஜம்தான். ராமநாதனுக்கும் அதில் சபலம் தட்டிற்று. இரண்டு மூன்று கம்பெனிகளின் பங்குகளை வாங்கினான். இரண்டாயிரம் லாபம். லாபம் கிடைத்தது என்றால் மேலும் மேலும் மும்மரமாக ஈடுபடும்படி தூண்டுவதற்கு வேறே ஆளாவேண்டும்? லாபத்தின் உருவத்தில் வந்த பிசாசுதான் கொன்று விடுமே!

பங்கு வியாபாரத்தில் ஒரேமூச்சாக இறங்கினான் ராமநாதன். பங்குகளின் விலையும் விஷம்போல் ஏற ஆரம்பித்தது. ஒரேயடியாக லாபத்தைப் புரட்டிவிடவேண்டுமென்ற மனித இயல்புக்கு ராமநாதன் மாறுபட்டவனல்ல. இரண்டரை லட்சத்திற்குப் பல பங்குகளையும் வாங்கிவிட்டான். சிறிது விலை உயர ஆரம்பித்தது. எதிர்பார்த்த மாதிரி உயர்ந்திருந்தால் நாலேகால் லட்சம் லாபம் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் திடீரென்று விலை இறங்க ஆரம்பித்துவிட்டது. விலை இறங்க ஆரம்பித்ததும் விற்றிருந்தால் கால் லட்சம் நஷ்டத்துடன் கணக்கு முடித்திருக்கலாம். "விலை ஏறாமல் எங்கே போகிறது?" என்ற நம்பிக்கைதான் இரண்டு லட்சத்தில் கொண்டுவந்து விட்டது. பிறகு அன்றையப் பருவ விலைக்குப் பங்குகளை விற்றுத் தொலைத்தான்.

இரண்டுலட்ச ஆஸ்திக்காரனிடம் ரொக்கம் எவ்வளவுதான் இருக்க முடியும்? ரொக்கம், நகைகள் எல்லாம் தீர்ந்தபின் அசையாப் பொருள்களும் அடகு வைக்கப்பட்டன. மேற்

கொண்டு கடன் ஐம்பதிணயிரம். இவ்வளவு கடன் இருக்கும்போது கவலையில்லாதிருக்குமா? கடன்காரர்களில் பலர் அன்றைக்கென்று கடனைக் கேட்க வந்திருக்கிறார்கள் என்றால் எப்படி மகிழ்ச்சியோ டிருக்கமுடியும்?

விருந்தினர்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். "ராமநாதன் எங்கே?" என்று கேட்டார் ஒருவர். "எங்கே?" "எங்கே?" என்று எதிரொலிமாதிரி பல குரல்கள் கிளம்பின. ஆளைக் காணோம்! இதே சமயத்தில்தான் கடன் கொடுத்தவர்களும் வந்துசேர்ந்தனர். ராமநாதனின் மறைவு அவர்கள் வயிற்றில் நெருப்பைக் கொட்டியதுபோல விருந்தது. "உங்களால் தான் ஆளே மறைந்துவிட்டான்" என்று கடன்காரர்கள் பேரில் விருந்தினர் பாய்ந்தனர். மகிழ்ச்சி நிறைந்திருக்க வேண்டிய அந்த இடத்தில் துக்கம் தாண்டவமாடியது.

ராமநாதனின் மனைவி சுலோசனா அறைக்குள் சென்று படுக்கையில் விழுந்தாள். துக்கம் தாங்கமுடியவில்லை. "கோ"வென்று கதறினாள். கடன்தொல்லை ஒரு பக்கம் இருக்கட்டும். விசேட தினத்தில், விருந்தினர் முன்னால் அவர் ஓடிவிட்டாரே என்ற வெட்கம் அவளைப் பிடுங்கித் தின்றது. கடன் தொல்லை தாங்கமாட்டாமல் தூக்குப்போட்டுக்கொண்டு செத்துப்போன எவ்வளவோ பேர்களுடைய கதைகளை அவள் கேட்டிருக்கிறாள். அப்படி நினைக்கும்போது அவள் இருதயமே வெடித்து விடும் போலிருந்தது.

தலையணைக்குமேலே ஒருகடிதம் காற்றிலே

அசைந்துகொண்டு நிற்பதைக் கண்ணீர்ப் படலத்தினூடே கண்டாள். எடுத்துப் பார்த்தாள்.

அன்புள்ள சுலோசன,

நான் மறைந்திருக்கவேண்டிய அவசியம் வந்துவிட்டது. உன்னைப் பிரிய வேண்டி நேர்ந்ததைநினைக்கையில் நெஞ்சு வேதனைப்படுகிறது. இக்கடிதத்தை உனக்கு எழுதுவதன் நோக்கம் முக்கிய விஷயம் ஒன்றைத் தெரிவிக்க வேண்டியிருப்பதாலேயே. நான் எப்பொழுது திரும்பி வருவேனென்று சொல்ல முடியாது....ஆனல் வருவேன், அது நிச்சயம். என்னதான் கஷ்டம் வந்தாலும் நானுக என் உயிருக்குத் தீங்கு செய்து கொள்ள மாட்டேன் எனபதை நம்பு.

அன்புள்ள

ராமநாதன்.

கடைசி வாக்கியம்தான் அவளுக்குப் பெரும் ஆறுதலைக் கொடுத்தது.

அன்றையப்பொழுது எப்படியோ கழிந்தது.

*　　*　　*

உற்றூர் உறவினர் எங்கெங்கோ ஆளனுப்பி ராமநாதனைத் தேடச் செய்தனர். இருக்குமிடம் தெரியவில்லை. ஆறு மாதங்களாகி விட்டன.

ஒரு தினம் அவளுக்கு ஒரு கடிதம் வந்தது. விஷயம் பின் வருமாறு :

அன்புள்ள சுலோசனு,

தற்சமயம் பெங்களூரில் தங்கியிருக்கிறேன். நீயும் குழந்தையும் சுகமாயிருப்பீர்கள் என்று நம்புகின்றேன். ஏதோ கிரகக்கோளாறுல்தான் திடீரென்று நஷ்டம் ஏற்பட்டு விட்டது. விரைவில் நற்காலம் வரும். பங்கு வியாபாரத்தில் இழந்த பணத்தைப் பங்கு வியாபாரத்திலேயே சம்பாதித்து விடமுடியும். முயற்சிக்கிறேன். திரும்பி வரும்போது நல்ல நிலையில் வருவேன்.

**ராமநாதன்.**

ராமநாதன் சுகம் என்பதை மட்டில் கேட்டுவிட்டு அவளால் சும்மா இருக்கமுடியவில்லை. நேரில் பார்க்க ஆசைப்பட்டாள். போகும்போது கையுடன் கொண்டு சென்ற இரண்டாயிரம் ரூபாய் இதற்குள் காலியாகியிருக்கும் என்று அவளுக்குத் தெரியும். கையில் கொஞ்சம் பணத்தை எடுத்துக்கொண்டாள். பழனிக்குப் போய் வருவதாக அண்டை வீட்டார்களிடம் சொல்லிவிட்டு பெங்களூருக்குப் புறப்பட்டாள்.

கணவனும் மனைவியும் சந்தித்தனர். பேசவில்லை. எப்படிப் பேசமுடியும்? துக்கம் தொண்டையை யடைக்கிறது. இருவர் கண்களிலும் நீர் ஆறுகப் பெருக்கெடுத்தது. மௌனமாயிருந்த சில நிமிஷ நேரம் இதயத்தாலேயே சம்பாஷித்துக் கொண்டார்கள் போலும்!

ஒரு வாரம் அங்கே தங்கினுள். ஊருக்கு வரவேண்டுமென்று ராமநாதனையும் கூப்பிட்டாள். எப்படி வரமுடியும்? கண்டால் உடன்

கைதி செய்யத் தயாரா யிருக்கின்றனர் கடன் காரர். கடன் காரர்களிடம் கைதியாக அவன் விரும்பவில்லை. ஓடிப்போனவன் கடனைத் திருப்பிக் கொடுக்கிற முறையில் திரும்பி வந்தா லல்லவா கௌரவம்? பிடிபடுவதா மரியாதை? இப்பொழுது அவளுடன் ஊருக்கு வரமுடியாத நிலையை விவரமாகச் சொன்னான். விரைவில் வருவதாக சமாதனம் கூறி அவளை ஊருக்கு வண்டியேற்றி விட்டான்.

சுலோசனா திரும்பி வந்தாள். பெங்களூரி லிருந்து தான் சனியன் அவளைப் பின்தொடர ஆரம்பித்தது என்பதை அவள் அறிய இன்னும் சில நாட்கள் ஆகவேண்டும். இப்படி யொரு விபத்து வருமென்று யார்தான் எதிர் பார்த்திருக்க முடியும்? விபத்தா இது? சாதா ரண காலமாயிருந்தால் இந்த விபத்தை அவர் கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றிருப்பார்கள். இன்றோ பேரிடி.

சுலோசனா பெங்களூருக்குப் போய் வந்து மூன்று மாதமாகிவிட்டது. இப்பொழுது அவள் மூன்று மாத கர்ப்பிணி. அவளுக்கு இது சாதா ரண விஷயமாகத்தானிருந்தது அப்புறம் மூன்று மாதம் பறந்தது. இச்சமயம் தான் சுலோசனா கர்ப்பிணி என்ற விஷயம் ஊர் முற் றும் பறக்க ஆரம்பித்தது.

* * *

அவள் விபசாரி என்பதாக ஊரே பேசு கிறது. கணவன் ஊரை விட்டுப் போய் ஒரு வருடமாகிறது. இந்த நிலையில் ஒரு ஸ்திரீ கருக்

கொண்டால் மற்றவர்கள் குற்றம் சாட்டுவதில் ஆச்சரியமில்லை.

இந்த இழிச் சொல்லிலிருந்து அவள் விடுபடவேண்டுமே, அதற்கு வழியென்ன?

கணவனைக் காட்டிக் கொடுப்பதா? கர்ப்பமாகி விட்டதற்காகக் காணமற்போன கணவன் மீது பழி சுமத்துவதாகவே உலகம் சொல்லும்.

பழிச் சொல்லை ஏற்றுக்கொள்ளுவதா? அவள் பத்னி. அதை அவள் அறிவாள், கணவன் அறிவான்; தெய்வம் அறியும்.

"உன் ஆயுள் பூராவும், ஏன், அதற்குப் பின்னரும் கூட இந்தப் பழிச் சொல் இருக்குமே, அதை ஏற்றுக் கொள்ளப் போகிறாயா? வேண்டாம். கணவன் இருக்குமிடத்தைச் சொல்லிவிடு." இப்படியாக ஒரு பக்கம் வாதித்தது.

"கணவனைக் காட்டிக் கொடுத்து விடாதே. அவன் இப்பொழுது பிடிபட்டால் அவமானத்தால் இறந்தே போவான். உன் உள்ளமறிய நீ கற்புள்ளவளாயிருக்கும் பொழுது ஊருக்கு அஞ்சுவானேன்?" என்ற சிந்தனையொருபுறம்.

கணவனுக்காக இந்தப் பழிச் சொல்லை ஏற்றுக் கொள்வதென்ற முடிவுக்கே வந்து விட்டாள்.

அவள் உள்ளமே அவளின் கற்புக்கு சாட்சி. கணவனே தெய்வம். உண்மை, தெய்வத்துக்கு அர்ப்பணம்.

# விஷ பானம்

"நீங்கள் ஜில்லா கலெக்டராக உயர்த்தப்பட்டிருக்கிறீர்கள். 2-ம் தேதியன்று செங்கற்பட்டில் வேலை ஒப்புக்கொள்ளவும்."

மாகாணத் தலைமைக் காரியாலயத்திலிருந்து வந்த இந்தத் தபாலை உடைத்தான் கணேசன்; படித்தான். உதடுகள் லேசாக அசைந்தன. புன்முறுவல் தவழ்ந்தது. நிமிர்ந்து உட்கார்ந்தான். உடலில் புத்துணர்ச்சி பரவியது.

இந்த மகிழ்ச்சிச் செய்தியை உடனே யாரிடமாவது சொல்லித்தானாக வேண்டுமென்ற ஆவல் பீறிட்டுக் கொண்டுவந்தது. யோசனையென்ன? மனைவிடம் சொல்லவேண்டியது தானே? ஆஹா! இதை நினைத்தபோது அவன் மகிழ்ச்சி எங்கோ பறந்தோடியது. காரில் ஏறப் போனவன் திரும்பி வந்தான். சற்று உலாவினான். மறுபடியும் காரில் ஏறிக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டான்.

*　　*　　*

ஜில்லா கலெக்டராகப் போகும் கணேசனையும் அவனுடைய மனைவியையும் வழியனுப்ப ஸ்டேஷனில் ஏகப்பட்ட கூட்டம். எல்லாரிட

மும் விடைபெற்றுக்கொண்டு முதல் வகுப்பு வண்டியில் ஏறினர், கணேசன் தம்பதிகள்.

அதே வண்டியில் ஒரு ஆங்கிலேயர் தமது மனைவியுடனும், ஐந்து வயதுக் குழந்தையுடனும் உட்கார்ந்திருந்தார்.

ரயில் சிறிது சென்றிருக்கும். கணேசனும் ஐரோப்பிய கனவானும் ஏதேதோ சம்பாஷித்தனர். ஐரோப்பியருடைய மனைவி ஜில்லா கலெக்டர் கணேசனுடைய மனைவியிடம் ஏதோ கேட்டாள். அதற்குப் பதில் புன்முறுவல்தான். ஜில்லா கலெக்டருடைய மனைவிக்கு ஆங்கிலம் தெரியாமலிராது என்று அவள் எண்ணியிருக்க வேண்டும். மேலும்மேலும் ஏதேதோ கேட்டாள். பதில் புன்முறுவலும் மௌனமும்தான்.

ஐந்துவயதுக் குழந்தை அதன் தாயாரிடம் "ஏன் அவள் பதிலே பேசமாட்டேனென்கிருள்? ஊமையோ?" என்று கேட்டாள்.

ஜில்லா கலெக்டர் பேயைக்கண்டு மிரள்பவர்போல் விழித்தார். உடல் நடுங்கியது. வியர்வை அரும்பிற்று. நா வரட்சியடைந்தது. பேசுவதற்கே வாய்வரவில்லை. கூஜாவைத் திறக்க எண்ணினர். கை நடுங்கிற்று. எப்படியோ திறந்து ஒரு டம்ளர் தண்ணீரைக் குடித்துவிட்டார். "ஆமாம், அவள் ஊமைதான்" என்று தட்டுத் தடுமாறிக்கொண்டு அந்த ஐரோப்பியச் சீமாட்டியிடம் சொன்னர். இந்த மூன்று வார்த்தைகளையும் சொல்ல அவருக்கு இரண்டு நிமிஷம் ஆயிற்று. அவள் மௌனமாகத்தான் இருந்தாள். குழந்தைகளுக்

கென்று சிரித்துவிட்டது. குழந்தைகளுக்குத் தெரியுமா, இதயத்தின் அடியிலிருந்து கிளம்பிய சோகச்சொற்களைக் கேட்டு மௌனமாயிருப்பதுதான் மரியாதை என்று?

தன்னுடைய மனைவி ஊமை என்பதை எதிரிலிருப்பவர்கள் தெரிந்து கொண்டார்கள் என்று நினைக்கும்போதெல்லாம் கணேசனுக்கு என்னவோ செய்தது. வெட்கம் அவனைப் பிடுங்கித் தின்றது. முகத்தை வெளிப் பக்கம் திருப்பிக்கொண்டான். முகத்தில் அரும்பிய வியர்வைதான் காற்றில் ஆறிற்றே தவிர உள்ளம் ஆறவில்லை. அவனுடைய பரிதாபகரமான நிலையை உணர்ந்தவர்போல ஐரோப்பியரும் மௌனமானர்.

* * *

கணேசன் தனது புதிய உத்தியோகத்தை ஏற்றுக் கொண்டான். எல்லாக் குமாஸ்தாக்களும்கூடி புதிய உத்தியோகஸ்தரைப்பற்றி விமர்சனம் செய்துகொண்டிருந்தனர். இதே சமயத்தில்தான் புதிய ஆபீஸைச் சுற்றிப் பார்த்துவரக் கிளம்பினன் கலெக்டர் கணேசன். "ஏண்டா அவருடைய பெண்டாட்டி ஊமையாமே?" என்ருன் ஒருவன். "ஊமையின் புருஷன் ரொம்பப் பேசுகிருரே!" என்ருன் மற்ருெருவன். "ஒன்றுக்கொன்று எதிரிடைதான்போலிருக்கிறது!" என்று சொன்னன் மற்ருெருவன். கொல்லென்று சிரித்தனர் கூடியிருந்தவர். நாராசமாக விழுந்தது அந்தச் சம்பாஷணை. சிரிப்பு அலை ஈட்டியாக வந்து பாய்ந்தது அவன் இதயத்தில். விடுவிடென்று



5

பங்களாவை நோக்கிப் புறப்பட்டான். படீ ரென்று கட்டிலில் விழுந்தான். ஊமை மனைவி இதைக் கவனித்துக்கொண்டுதான் இருந்தாள். அவன் சிந்திக்கத் தொடங்கினான்.

* * *

ராவ்பகதூர் பரமேஸ்வரம் பிள்ளை பெரிய பணக்காரர். பொதுஜன செல்வாக் குடைய வர். ஆனால் வாழ்க்கையில் இன்பம் காணாதவர். அவருடைய ஒரே பெண்தான் கோமளம். அருமையான மனைவி இறந்தபின் கோம ளத்திற் காகவேதான் பிள்ளை உயிர் வாழ்ந் தார் என்று சொல்லவேண்டும்.

கோமளத்திற்கு இவ்வளவு அழகு எப்படி உண்டாயிற்றென்றே சொல்லமுடியாது. அழ கின் எல்லையாக ஒரு உருவத்தைத் தயாரிக்க எண்ணித்தான் கோமளத்தைக் கொடுத்தது போலும் இயற்கை. சிற்பம்தான். ஆனால், அவளை ஊமையாகப் படைத்துப் பழிவாங்கி விட்ட ஈவிரக்கமற்ற கடவுளின் செய்கையை நினைக்கும்பொழுது கல்நெஞ்சனும் கசிந்துருக வேண்டும். இவ்வளவு அழகும் என்ன உப யோகம்? அழகுகூட வேண்டாம்; அவள் பேசக்கூடியவளாகப் பிறந்திருந்தால் போதுமே!

இதை எண்ணி எண்ணிப் பலகாலும் உருகினார் பிள்ளை. ஊமைகளுக்குச் சொல்லிக் கொடுக்கும் பிரத்தியேக உபாத்தியாயரைக் கொண்டு கல்வி கற்பிக்கவும் ஏற்பாடு செய் தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் முதுகோடு ஒட்டிய வயிறுடன் கணேசனும் அவன் தந்தையும் வந்து சேர்ந்தனர். பசியால் மெலிந்து நோயின் வாதை தாங்கமாட்டாமல் பங்களா வாயிலில் விழுந்து கிடந்தான் கணேசனின் தந்தை. ஏழு வயதுச் சிறுவன் பக்கத்தில் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தான். பரமேஸ்வரம் பிள்ளையின் இரக்க சிந்தை இவர்களுக்கு உதவி செய்தது. கணேசனுடைய தந்தைக்கு வைத்தியம் செய்துதான் பார்த்தார். ஆனால் காலம் கடந்துவிட்டது.

அதுமுதல் கணேசன் பரமேஸ்வரம் பிள்ளை வீட்டில்தான் வசித்து வந்தான். தன்னுடைய பிள்ளையாக எண்ணி அவனைப் படிக்க வைத்தார். அவனுக்காக, அவனுடைய மேற்படிப்பு உட்பட செலவழிக்கப்பட்டது பல்லாயிரக் கணக்கில் இருக்கும்.

கணேசனுடைய பதினெட்டாவது வயதில் அவனுக்கும் கோமளத்திற்கும் விவாகம் பிரபலமாக நடந்தது. பரமேஸ்வரம் பிள்ளைக்கும் கோமளத்திற்கும் தான் மிகவும் கடமைப்பட்டவன் என்பதை அவன் உணர்ந்திருந்தான். பரமேஸ்வரம் பிள்ளையிடம் அவன் காட்டும் மரியாதையும், கோமளத்திடம் செலுத்தும் அன்புமே இதற்கு உதாரணங்கள்.

அப்புறம் இரண்டுவருஷங்களுக்குப் பிறகு பரமேஸ்வரம் பிள்ளை மரணப் படுக்கையில் விழுந்தார். ஒருநாள் கணேசனையும் கோமளத்தையும் அழைத்து இருவர்களையும் ஒன்ருக வைத்துப் பின்வருமாறு சொன்னர் :

"கணேசா! கோமளத்தினுடைய அழகும், அறிவும் உனக்கு நன்ருகத் தெரியும். அவளுடைய புத்திசாலித்தனத்தைப் பலமுறை நீயே வியந்து கூறியிருக்கிருய்.

"நீங்கள் இப்படியே எந்நாளும் வாழ வேண்டும். எக்காரணத்தைக்கொண்டும் நீ இவளைக் கைவிட்டு விடாதே அப்பா! இதுதான் என் மரண சமயத்தில் கேட்டுக்கொள்வது"

கடமையைச் சரிவர நிறைவேற்றுவேன் என்பதைக் கண்ணீர் உகுத்து நிரூபித்தான், கணேசன்.

* * *

இந்தச் சம்பவங்கள் கணேசன் மனத் திரையில் மீண்டும் ஒருமுறை ஓடின.

"இன்றைய என் வாழ்க்கை பரமேஸ்வரம் பிள்ளையால் ஏற்பட்டது. யாரோ ஒரு பிச்சைக்காரனின் அனுதைப் பிள்ளை நான். அவர் என்னை ஆதரித்ததெல்லாம் தன் மகளுக்காகத் தான். பிச்சைக்காரனுகத் திரியவேண்டிய நான் இன்றைக்கு லட்சாதிபதி. எல்லாம் கோமளத்தால் ஏற்பட்டதுதான். ஆனுல்? அதற்காக?— ஊமையைக் கட்டிக்கெண்டு எப்படிக் காலந் தள்ள முடியும்? ஒரு கூட்டத்திற்கு அழைத்துச் செல்லமுடியுமா? நண்பர்கள் வீட்டுக்குத் தான் போகமுடியுமா? இவைகளைப் பார்க்கும் போது ஆஸ்தி யிருந்துதான் என்ன, இல்லா விட்டால்தான் என்ன? இதற்கு முடிவுதான் என்ன?" என்று எண்ணியவாறே சாய்ந் தான்.

சிறிது நேரத்திற்குப் பின், "ஆமாம், அதுதான் சரி. அவளுக்கு விஷம் கொடுத்துக்

கொல்வதுதான் முடிவு" என்று எண்ணினான். சுலபமாகத்தான் எண்ணிவிட்டான்! அப்படி எண்ணிய அடுத்த நிமிஷம் அவனுடைய உடல் நடுங்கியது. கொலை! கொலையா செய்வது?

முன்னொருசமயம் பிச்சைக்காரனாகிய தன் தந்தையின்மீது அவன் விழுந்து அழுத காட்சி நினைவுக்கு வந்தது. பரமேஸ்வரம் பிள்ளையின் மரணப் படுக்கையை நினைத்தான். கல கல வென்ற சிரிப்பொலியுடன் பரமேஸ்வரம் பிள்ளையே எதிரே வந்துவிட்டதாக உணர்ந்தான். 'கோ' வென்று கதறியவாறு கைகளால் கண்களை மூடிக்கொண்டான்.

"அடபாவி! உண்ட வீட்டுக்கு துரோகம் செய்ய நினைத்துவிட்டாயே. வீதியில் கையைத் தலையணையாகக்கொண்டு படுத்து உறங்கவேண்டியவனல்லவா நீ? உனக்கென்னடா வாழ்வு வந்துவிட்டது? வந்த வாழ்வெல்லாம் அவளால் வந்தவைதானேடா?" இப்படி யொரு குரல் எழுந்து வேகமாகப் பேசி அவன் இதயத்தை இடித்தது.

"வாழ்வா? அவளால் வந்தவைதான், இருக்கட்டுமே. இந்த அவமானத்தை யாரால் சகித்துக்கொண் டிருக்கமுடியும்? கேலியைப் பொறுத்துக்கொண்டு உயிர் வாழவேண்டுமா?" இது மற்றொரு குரல்.

"கேலியா? உலகம் உன்னைப் பாராட்டுமே. அந்தஸ்து உயர்ந்தாலும் பழைய நிலைமையை மறந்து மனைவியைக் கைவிடவில்லை என்ற பெயரல்லவா உனக்குக் கிடைக்கும்.

உன் தியாகம் என்றென்றைக்கும் விளங்குமே, அப்பா! சற்று யோசித்துப் பாரடா. உன்னுடைய அன்றைய நிலையில் ஊமைமட்டுமல்ல, கையில்லாதவளாயிருந்தாலும் மணந்துகொண்டிருப்பாயே, இப்பொழுது வெறுக்கிறாயே, உனக்கு நரகம் காத்திருக்கிறது.''

''வேறே நரகம் இருக்கிறதா? இதுதான் நரகம், நான் இப்பொழுது அனுபவிப்பது தான் நரகத்தைவிட அதிக வேதனையாயிற்றே. என்னால் சகிக்க முடியவில்லையே.''

மனோவேதனை அவனைக் குலுக்கியது. ''என்னைப் பார்த்து எல்லாரும் சிரிக்கிறார்களே'' என்று எண்ணினான். ஊரே அவனைப் பார்த்துச் சிரிப்பதுபோலிருந்தது. ''கலெக்டர் மனைவி ஊமை,'' ''கலெக்டர் மனைவி ஊமை'' இவ்வாறு எல்லாரும் சொல்லிச் சிரிப்பது அவன் காதில் விழுவதுபோலிருந்தது. காதை அடைத்துக்கொண்டான்.

விடுவிடென்று எழுந்து வெளியே சென்றான். திரும்பி வரும்பொழுது அவன் கையிலிருந்தவை விஷ மருந்துகள். அதை ஒரு அறையில் வைத்தான்.

கணேசனின் நிலையை உள்ளபடி உணர்ந்த ஒரு ஜீவன் அந்த ஊமைப்பெண் தான். அவள் ஊமையாக மட்டும் இல்லாதிருந்தால் பெரிய மேதையாக விளங்கியிருப்பாள். வாயைப் பிடுங்கிக்கொண்ட இறைவன் அதற்குப் பதிலாக அறிவைக் கொடுத்துவிட்டான்.

கணவனுக்கு அன்புடன் உபசரணை செய்தாள், அன்னமிட்டாள். அவள் பேசக்கூடியவ

ளாக இருந்தால் "என்ன, ஒருமாதிரியாக இருக்கிறீர்கள்?" என்று கேட்டிருப்பாள். அந்தப் பாக்கியம்தான் இல்லையே. ஆனால் மனதிற்குள் எண்ணிக்கொண்டாள்.

கணேசன் உலாவி விட்டுப் படுக்கைக்கு வந்தான். இரண்டு டம்ளர் பாலை வைத்திருந்தாள் வேலைக்காரி.

இதுதான் சரியான சமயமென்று விஷம் வைத்துள்ள அறைக்குப் புறப்பட்டான். ரத்தம் கொதிப்பேறி அவன் உடல் தீயிலிட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. பேயால் அறையப்பட்டவனைப்போல ஓடிவந்தான். டிராயரைத் திறந்து விஸ்கி பாட்டிலை எடுத்து உடைத்து மளமளவென்று குடித்துவிட்டான். தான் செய்யப்போகும் கோரச் செயலை சுய நினைவோடு செய்ய அவன் விரும்பவில்லை போலும்! திரும்பி வந்தான்; அறையைத் திறந்தான். அங்கே கண்ட காட்சி அவனை மது மயக்கத்திலிருந்து தெளிவித்தது. கோமளம் அலங்கோலமாகக் கிடந்தாள். விஷ புட்டி காலியாகக் கிடந்தது. அதன்கீழே கிடந்த கடிதத்தில் பின்வருமாறு எழுதி யிருந்தது.

"ஊமை மனைவியைக் கட்டிக்கொண்டு நீங்கள் படும் அவஸ்தையை என்னாலும் உணர முடிந்தது. இனியும் உங்களுக்குப் பாரமாக இருப்பானேன்? இனியாகிலும் நீங்கள் நல்ல மனைவியுடன் சந்தோஷ வாழ்க்கை நடத்துவீர்களாக!"

**கோமளம்.**

# யோகி

அவனுடைய தோற்றம் சந்யாசியைப் போலத் தான் இருக்கிறது. ஆனால் முகத்தில் ராஜ களை சொட்டுகிறது. காட்டின் மத்தியில் கிளை கள் நீண்டு பரவிய ஆல மரத்தினடியில் கண் மூடி மௌனியாய் அமர்ந்திருக்கிறான். சிற்சில சமயங்களில் அவனுடைய உதடுகள் அசைகின் றன. இறைவன் நாமத்தை உச்சரிக்கிறான் போலும்!

சந்யாசிக் கோலத்திலேயே பக்கத்தில் அமர்ந்துள்ளவன் சிஷ்யன்.

"சுவாமி" என்றான் சிஷ்யன். குரு கண் விழித்துப் பார்த்தார்.

"சுவாமி! உணவு கொண்டுவந்திருக்கி றேன், அருந்துங்கள்."

சிஷ்யன் கொண்டுவந்திருந்த சாதத்தில், குரு இரண்டு கவளம் மட்டும் எடுத்துக்கொண் டார். மிகுதியை சிஷ்யன் சாப்பிட்டான்.

"ஏன் சுவாமி! தாங்கள் அன்னமே சாப் பிடுவதில்லை?" என்று கேட்டான் சிஷ்யன்.

"சிவா! இலை, சருகு, காய் கனிகளைச் சாப்பிட்டே பழக்கமாகிவிட்டது, சிவனே! அன்னம் பிடிப்பதில்லை."

"சுவாமி! சந்யாசங்கொண்டு எவ்வளவு காலமாகிறது?"

"எனக்கு அதைப்பற்றி ஒன்றுமே தெரியாது சிவனே! சுமாராகப் பத்துப் பதினைந்து வருடமாக இந்தக் காட்டில்தான் திரிந்து கொண்டிருக்கிறேன்."

"ஞான விஷயங்கள் எவ்வளவோ கற்றிருக்கிறீர்களே, இவைகளை எப்பொழுது கற்றீர்கள்? இப்பொழுது உங்களுக்கு வயது எவ்வளவு, சுவாமி?"

"ஆத்மார்த்தீக நூல்களையெல்லாம் நிறையப் படித்ததாக நினைவிருக்கிறது. ஆனால், எங்கு, எப்பொழுது படித்தேன் என்பது தெரியவில்லை. வயசா, அதுகூட எனக்குத் தெரியாது. என் பெயரே எனக்குத் தெரியாதே அப்பனே! என்னைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியவில்லையே? இப்பொழுது என் உள்ளத்தில் இடம் பெற்றிருப்பது ஒரே ஒரு வஸ்து; அதுதான் இறைவன். அதைத் தவிர வேறொன்றையும் நான் அறியேன்."

"உங்களைக் குருவாக அடையும் பாக்கியம் பெற்றதற்குப் பூர்வ ஜன்ம புண்ணியமேதான் காரணம், சுவாமி."

"அது இறைவன் கட்டளை அப்பனே!"

* * *

சிஷ்யன்-அவன் பெயர் ஆனந்தானந்தா-சில மாதங்களுக்கு முன் அடுத்த ஊருக்குப் போவதற்காக இந்தக் காட்டு வழியே போய்க்

கொண்டிருந்தான். வழியில், தியானத்தில் இருந்த சுவாமியைக் கண்டு அவரைக் குருவாக அடைந்தான். அதுமுதல் அந்தக் காட்டை யடுத்த ஊர்களுக்குச் சென்று உணவு வாங்கி வந்து குருவுக்குக் கொடுத்துத் தானும் உண்பதே அவன் வேலை.

ஒரு நாள், விபவ நகர் சமஸ்தானத்தின் தலைநகரில் பிச்சை வாங்கப் போனான் சிஷ்யன். நடந்த களைப்புத் தீருவதற்காக ஒரு வீட்டின் திண்ணையில் சற்றே படுத்தான். திண்ணைக்கு அடுத்தாற்போலிருந்த அறையில் இருவர் சம்பாஷிப்பது தெளிவாகக் காதில் விழுந்தது.

"அப்பா! இந்தப் படத்திலிருக்கிறது யாரப்பா?" என்று கேட்டாள் ஒரு சிறுமி.

"இவர்தானம்மா நம்முடைய மகாராஜா விஜயபாலர்" என்றார் தந்தை.

"'ராஜா இல்லை, ராணிதான் ஆளுகிறாள்' என்று சொன்னாயே அப்பா."

"ஆமாம், இந்த ராஜாவினுடைய ராணி தான் இப்பொழுது ஆளுகிறது. ராஜாதான் செத்துப் போய்விட்டாரே..................."

இதற்குள் அங்கே வந்தாள் சிறுமியின் தாய். "குழந்தையிடமா அந்தக் கதையெல்லாம் சொல்வது? பயந்து விடுவாளே!" என்றாள்.

அவள் குறுக்கே வராமலிருந்தால் அவர்களுடைய சம்பாஷணை அத்துடன் முடிந்திருக்

கும். அவள் "சொல்ல வேண்டாம்" என்று சொன்னதனுலே, அந்த மர்மமான விஷயத்தைக் கேட்கவேண்டுமென்ற ஆவல் கிளம்பி விட்டது சிறுமிக்கு!

"அப்பா! அந்தக் கதையைச் சொல்லப்பா, நான் பயப்படவில்லை" என்ருள் சிறுமி.

"பயப்படாமல் இருக்கிருயா? சொல்கிறேன். இந்தப் படத்திலிருக்கிருரே, ராஜா, இவர் பதினைந்து வருடங்களுக்கு முன்னல் குதிரைமீதிருந்து விழுந்துவிட்டார். அதேயிடத்தில் இறந்துபோனர். ராணி புருஷன்மீது மிகுந்த அன்புகொண்டவள். அவள் அழுதாள், கதறினள். என்ன செய்வது? பிணத்தைக் கொளுத்துவதற்காகக் கொண்டு சென்ருர்கள். ஸ்மசானத்தில் இறக்கிய சமயம் பலமான மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. பக்கத்திலுள்ள கொட்டகைக்குச் சென்று தங்கியிருந்தார்கள். மழை விட்டபின்பு போய்ப் பார்த்தால் பிணத்தைக் காணும்!"

"எங்கேப்பா போச்சு?"

"மிருகங்கள் ஏதாவது கொண்டுபோய் இருக்கும்"

"பூ! இதைக் கேட்டுத் தானப்பா நான் பயந்து போவேன்னு சொன்னே?" என்று ஏளனமாகக் கேட்டாள் குழந்தை.

இவர்களுடைய சம்பாஷணை ஆனந்தானந்தன் காதில் விழுந்தாலும் ஒன்றுதான், விழாமலிருந்தாலும் ஒன்றுதான். சிறிது நேரத்

திற்குப் பின் வெளியே செல்ல எழுந்தான். அப்பொழுது அந்தச் சிறுமி கையில் படத்துடன் வெளியே வந்தாள். ஆனந்தானந்தனுக்கு மறைந்த மகாராஜாவினுடைய படத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் தோன்றி விட்டது.

"குழந்தை! அந்தப் படத்தைக் கொஞ்சம் காட்டு, பார்க்கலாம்!" என்ருன்.

"காட்ட முடியாது, நீ யாரு?"

"உங்க ராஜாவை நான் பார்க்கக்கூடாதாம்மா?"

"ராஜாவைப் பார்க்கணுமா? இந்தா, பாரு!"

படத்தைப் பார்த்ததும் அவனுக்குத் 'திகீல்' என்றது.

தன் குருவின் தோற்றத்தை ஒத்திருந்தது அந்தப் படம். அந்தப் படத்திற்குத் தாடி இருப்பதுபோலக் கற்பனை செய்து பார்த்தான். சந்தேகமில்லாமல் குருதான் என்று தெரிந்துவிட்டது. படத்தைக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டான்.

அவனுடைய மனம் ஒரு நிலையிலில்லை. "செத்துப் போனவர் எப்படிப் பிழைத்து வந்தார். ஒரு வேளை செத்திருக்கமாட்டாரோ? தன்னைப்பற்றி ஒன்றுமே தெரியாது என்றல்லவா சொல்கிருர் அவர்."

இப்படியெல்லாம் யோசித்தான். அன்றையத் தினத்திலிருந்து ராஜாவைப் பற்றிப்

பலரிடமும் விசாரிக்க ஆரம்பித்தான். அரண்மனையைச் சுற்றிச் சுற்றி வந்தான். அவனுடைய எண்ணம் ஒரு நிலையிலில்லாது சிதைந்தோடியது.

சிஷ்யன் அரண்மனையைச் சுற்றிச் சுற்றி வந்ததிலிருந்து சில விஷயங்கள் தெரிந்து கொண்டான். கணவனுடைய உடலை நரியோ நாயோ இழுத்துக் கொண்டுபோயிருக்கும் என்று இராணியால் எண்ணமுடியவில்லை. அல்லது உயிரோடு எழுந்து ஓடிப்போய் விட்டார் என்றும் தீர்மானிக்க முடியவில்லை. ஆனால், என்றைக்காவது ஒருநாள் தன்னுடைய கணவர் வந்துவிடுவார், என்று மட்டும் அவள் நம்பிக்கொண்டிருந்தாள்.

* * *

சில நாட்கள் சென்றன. பகல் பன்னிரண்டு மணி இருக்கும். குரு நிஷ்டையிலிருந்தார். சிஷ்யன் பின் புறமாக ஓங்கிய தடியுடன் யோகியை நெருங்கிக் கொண்டிருந்தான். அவன் உள்ளத்திலே பேராசைத் தீ, ஜ்வாலை விட்டு எரிந்து கொண்டிருந்தது. எலி பிடிக்கும் பூனையைப்போல் மெதுவாக அடிமேலடி வைத்து அவரை நெருங்கி ஓங்கி ஒரு போடு போட்டான்.

"சிவா" என்ற சப்தத்துடன் யோகி கீழே விழுந்துவிட்டார். சிஷ்யன் எடுத்தான் ஓட்டம். அரண்மனையை அடுத்ததும் அவன் கால்கள் இராஜ நடை பழக ஆரம்பித்தன!

* * *

மகாராஜா திரும்பி வந்து விட்டதாக ஊரெல்லாம் ஒரே பிரஸ்தாபம்.

ஆனந்தானந்தா, தானே காலஞ் சென்றதாகக் கருதப்படுகிற மகாராஜா என்று சொல்லிக்கொண்டு அரண்மனைக்குள் நுழைந்தான். தான் மயக்கமாகிக் கிடந்தபோது மரணமானதாக எண்ணிவிட்டார்களென்றும், பின்னர் இவ்வளவுகாலம் சந்யாச வாழ்க்கையிலே இருந்துவிட்டதாகவும் கூறினான் ஆனந்தானந்தன்.

உண்மையாகவே இவர் நம்முடைய ராஜா தான் என்று எண்ணினர் பலர். சிலர் மறுத்தனர். ராணியோ 'இவன் என் கணவனல்ல' என்று கூறிவிட்டாள்.

"நானே ராஜா!" என்ற ஆனந்தானந்தா சிறையிலிடப் பட்டான்.

அடிபட்டு விழுந்த குரு வெகு நேரத்திற்குப் பிறகு கண் விழித்தார். எழுந்து உட்கார்ந்தார். திக்பிரமை கொண்டு சுற்றும்முற்றும் விழித்தார்.

"ஈசா! ஒன்றுமே விளங்கவில்லையே! குதிரை மீதிருந்து விழுந்தேன். பிறகு சுடுகாட்டிலிருந்து எழுந்து ஓடினேன். இதென்ன சந்யாசக் கோலம்! ஆமாம், ஆமாம்! இத்தனை நாட்களை சந்யாசியாகத் தானே கழித்து விட்டோம்! எத்தனையோ ஆண்டுகளாக நான் மகாராஜா என்பதையே மறந்தல்லவா இருந்து விட்டேன்! ஆமாம், இப்பொழுது—தலையில்

விழுந்த அடி, அப்பா, என்ன வலி! சந்யாசியைக்கூட அடிக்கும் ஆள் இருக்கிறனே?"

"கல கல" வென்று சிரித்தார் மன்னர்.

"சமஸ்தானம் எப்படியிருக்கிறது என்று பார்த்து விட்டுத்தான் வருவோமே!" என்று எழுந்தார்.

அரண்மனைத் தோட்டத்திலே உலாவிக் கொண்டிருந்தாள் ராணி. "தேவி!" என்ற குரல் கேட்டுத் திரும்பினள்.

பழக்கமான குரல்! எதிர் பார்த்த குரல்! "சுவாமி!" என்ருள். சிறிது சந்தேகம் போலும்! "தேவி! தெரியவில்லையா?" என்ருர் மன்னர். "நாதா!" என்று ஓடி வந்து காலில் விழுந்தாள் ராணி. அந்தக் குரலில் எவ்வளவு ஏக்கம்! எவ்வளவு துடி துடிப்பு!

இருவரும் எழுந்து உள்ளே சென்றனர். அரண்மனை முற்றிலும் ஒரே ஆனந்தமும், குதூகலமும் தாண்டவமாடின. "ராஜா வந்து விட்டார்! நம் ராஜா வந்து விட்டார்" என்ற ஒலி எங்கும் பரவிற்று. ஆனந்தானந்தா செய்தி இராஜாவின் காதுக் கெட்டிற்று. விலங்கிடப்பட்ட கரங்களுடன் அவன் அரசர் முன்பு கொண்டு வரப்பட்டான்.

"அரச போகத்திற்கு ஆசைப்பட்டாயா அப்பனே! நிலையில்லாத வாழ்க்கையை நீயுமா விரும்பினய்? உபதேசங்கள் காற்றில் மறைந்தனவோ!" என்று கேட்டார் மன்னர்.

அப்படியே காலில் விழுந்தான் சிஷ்யன். "சுவாமி! அறியாமை. இந்த உலகச் சுழலில் மீண்டும் அகப்பட்டுக் கொள்ளத் துணிந்த என்னைத் தாங்கள்தான் காப்பாற்றவேண்டும்" என்றான்.

"தேவி! இந்த அரச போக வாழ்க்கை உயர்ந்ததா? இதில்தான் இன்பம் இருக்கிற தென்று கருதுகிறாயா?" என்றார் மன்னர்.

"பிரபோ! எனக்கா இன்பம்? எனக் கென்று தனி இன்பமா? கணவனின் கட்டளையை நிறைவேற்றுவதுதான் இன்பம், சுவாமி" என்றாள் தேவி.

"மீண்டும் சிக்கலில் மாட்டிக்கொள்ள வேண்டாம். பேரின்பம் நமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. ஈசனின் இன்பம் என் றும் அழிவில்லாதது. அந்த இன்பத்தை நம் மிடமிருந்து பிடுங்கிவிட யாரும் முயற்சிக்க மாட்டார்கள். புறப்படு! இயற்கையில் வாழ் வோம். இயற்கையை உண்போம், இயற் கையை அனுபவிப்போம், இறைவனை அடை வோம்!" இவ்வாறு சொல்லிக்கொண்டே நடந் தார் மன்னர். தொடர்ந்தாள் ராணி.

"அரசு என்னுவது?" என்றார் மந்திரி.

"அவசியமானால் பொது ஜனங்களே ஒரு வரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டுமே!" இதுதான் மந்திரியின் கேள்விக்குக் கிடைத்த பதில். பதினைந்து வருட சந்யாச வாழ்க்கை அரசரை உலகப் பற்றற்றவராக ஆக்கி விட்டது.

# பைத்தியம்

அணைக்குடியை நோக்கிப் புறப்பட்ட பஸ் கோட்டூர் வந்ததும் சிறிது நின்றது. கோட்டூர் ஒரு பஸ் ஜங்ஷன். பிரயாணிகளும் டிரைவர்களும் அங்கேதான் சிற்றுண்டி சாப்பிடுவது வழக்கம். ஒரு நொண்டிப் பிச்சைக்காரன் தனக்குத் தெரிந்த பாட்டைப் பாடிக்கொண்டு பிச்சை கேட்டான். அவன் அதிருஷ்டம் எல்லாரிடமும் சில்லரை இல்லாமற் போய்விட்டது. சொல்லி வைத்த மாதிரி அனைவரும் சில்லரை இல்லை யென்றே சொன்னார்கள்! கொஞ்சம் பணக்காரப் பிச்சைக்காரனு யிருந்தால் "நான் கொடுக்கிறேன், சில்லரை" என்று சொல்லி யிருப்பான்! அப்படிச் சொல்ல வழி யில்லாததால் தான் போலும் நொண்டி மௌனமாகப் போய் விட்டான்!

அடுத்தாற்போல் ஒருத்தி வந்தாள், "ஐயா! ஒரு காலணுக் கொடுங்கள்!" என்று திட்டமாகக் கேட்டாள். மூலையில் உட்கார்ந்திருந்த ஒரு பையன் "கையெழுத்துப் போட்டுத் தருகிருயா? காலணுக் கொடுக்கிறேன்" என்று சிரித்துக்கொண்டே கேட்டான்.

"முடியாது!" என்று சொல்லிவிட்டு அவள் அடுத்த 'சீட்'டுக்கு நகர்ந்து விட்டாள்.

"பெரிய மனிதர்களிடமும் சினிமா நக்ஷத்திரங்களிடமும் தான் கையெழுத்து கேட்பார்கள். நீ என்னப்பா, பிச்சைக்காரியைக் கையெழுத்துப் போட்டுத் தரச் சொல்லுகிருயே," என்று அந்தப் பையனைக் கேட்டேன். எனக்கு இந்தச் சம்பவம் மிகவும் ஆச்சரியமாகத்தானிருந்தது. எனக்கு மட்டுமென்ன ?எல்லோருக்கும் தான் ஆச்சர்யமா யிருந்திருக்கும். பிச்சை கேட்டதும் கையெழுத்துப் போட்டுத் தருகிருயா என்று கேட்டானே, அந்த வார்த்தை அவ்வளவு பெரிய அஸ்திரமா என்ன? அதைக் கேட்டு மிரண்டு அடுத்த சீட்டுக்கு ஏன் போனுள்?

என் கேள்விக்குப் பையன் பதில் சொன்ஞன். "என்னமோ எனக்குத் தெரியாது. கையெழுத்துப் போட்டுத் தரயான்னு கேட்டா அவள் போய்விடுவாள்"

எனக்கு, இதில் ஏதோ மர்மம் இருக்கிற மாதிரியாகத் தோன்றியது. அடுத்தாற் போலிருந்த பெரியவரைப் பார்த்து. "இவள் யார் ?" என்றேன். விஷயம் வெளிவராதா என்று பார்ப்பதற்குத்தான். அவர் சிறிது நேரம்மௌனமாய் இருந்துவிட்டு "அவளுக்குப் பைத்தியம் என்று சொல்லுகிருர்கள். அவ்வளவு தான் எனக்குத் தெரியும்" என்ருர்.

இந்த விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்கிற ஆவல் மேலும் மேலும் அதிகரித்தது. இதே சிந்தனைதான் எனக்கு.

பஸ் அணைக்குடி போய்ச் சேர்ந்தது, இறங்கி நடந்தேன். என் பக்கத்தில் உட்கார்ந்

திருந்த பெரியவரும் இறங்கி வந்துகொண் டிருந்தார்.

"ஏன் சார், கோட்டூரில் பார்த்தோமே, பிச்சைக்காரி, அவளைப் பார்த்தால் பைத்தியம் மாதிரியாகத் தோன்றவில்லையே!" என்று ஆரம்பித்தேன்.

"ஆமாம்" என்றார்.

கோட்டூரில் அவர் பேசிய முறையிலிருந்து அவளைப்பற்றி இவருக்கு ஏதாவது விஷயம் தெரிந்திருக்க வேண்டுமென்றுதான் எண்ணினேன். நான் எண்ணியது சரி என்பது இப்பொழுது தெரிந்துவிட்டது.

"ஒருகாலத்தில் அவள் பணக்காரியாக இருந்திருக்கவேண்டும்" என்று சொன்னேன்.

"ஆமாம்" என்றார். ரொம்ப அழுத்தமான ஆசாமிபோ லிருக்கிறது!

"அப்புறம், எப்படி இம்மாதிரியாகிவிட்டாள்?" என்று கேட்டேன்.

சொல்ல ஆரம்பித்தார்.

"கோட்டூருக்கு அடுத்தாற்போலுள்ள வேலங்காடுதான் அவள் கிராமம். அவளுடைய தந்தை பெரும் பணக்காரர். ஒரே பெண்தான். இவளுடைய பன்னிரண்டாவது வயதில் தந்தை காலமாகிவிட்டார். அவள் பெயர் செல்லம். அவளும் அவளுடைய தாயாரும்தான் பெரிய வீட்டில் வசித்துவந்தனர். இவர்களுடைய வீட்டில் கணக்கப்பிள்ளையாக இருந்துகொண்

டிருந்த முனுசாமி செல்லத்தைக் கலியாணம் செய்துகொள்வதாகச் சொன்னன். செல்லத்தின் தாயாரும் அதற்கு இணங்கினள். வீட்டோடு மாப்பிள்ளையாக இருந்து விட்டுப் போவான் என்றே கருதினள்.

"அப்புறம், நாலு வருஷங்களுக்குப்பிறகு, செல்லத்தின் தாயார், செல்லத்தை முனுசாமியிடம் பிடித்துக் கொடுத்துவிட்டுக் காலமாகி விட்டாள்.

"அதிலிருந்து முனுசாமி செல்லத்தின் வீட்டிலேயே வசித்து வந்தான். கலியாணத்திற்கு ஏற்பாடு செய்யும்படி செல்லம் சொல்லி வந்தபோதெல்லாம் "இதோ ஆகட்டும், அதோ ஆகட்டும்" என்றே சொல்லிவந்தான். அவளும் நம்பிவந்தாள்.

செல்லத்தின் தந்தையார், பெண்களால் நிலபுலன்களைப் பார்த்துவர முடியாதென்று, எல்லாவற்றையும் நகைகளாகச் செய்து வைத்திருந்தார். அவைகளையெல்லாம் முனுசாமி எப்படியோ வெளிக் கிளப்பிவிட்டான். ஒரு நாள் அவசரமாக சமையல் வேலை பார்த்துக் கொண்டிருந்த செல்லத்தைக் கூப்பிட்டு ஏதோ ஒரு கடிதத்தில் கையெழுத்துப் போடும்படியாகச் சொன்னன். அவளும் போட்டுக் கொடுத்து விட்டாள்.

"சில தினங்களுக்குப் பிறகு முனுசாமியை ஊரில் காணேம். அப்பொழுதுதான் செல்லம் முனுசாமியை ஒருவாறுக உணர ஆரம்பித்தாள். இரும்புப் பெட்டியைத் திறந்து பார்த்

தாள். நகைகள் இல்லை. மோசம்போய்விட்டதை உணர்ந்தாள். அவள் நிலைமை பரிதபிக்கத்தக்கதாக ஆகிவிட்டது. அப்பொழுது அவள் நாலுமாத கர்ப்பம்.”

“அநியாயம், அநியாயம், முனுசாமி ஏன் இப்படியெல்லாம் செய்தான்?” என்று கேட்டேன்.

பெரியவர் மேலும் சொல்ல ஆரம்பித்தார்:-

“முனுசாமி அவளைக் கலியாணம் செய்துகொள்ளத்தான் ஆசைப்பட்டான். பணத்தாசைதான் அதற்குக் காரணம். தாயாரும் இறந்துபோனாள். நாதியில்லாத அவளிடமிருந்து பணம் கிடைத்துவிடும். பிறகு அவளைக் கட்டிக்கொள்வானேன் என்று அந்தப் பாவிக்குத் தோன்றியது போலும்!

“இரண்டு மாதத்திற்குப் பிறகு முனுசாமிக்கு செல்லம் இரண்டாயிரம் ரூபாய் தரவேண்டுமென்று சொல்லி யாரோ ஒருவன் அவளுடைய வீட்டை ஜப்திசெய்ய வந்தான். தலையில் இடிவிழுந்தது போலாயிற்று. பலவாறாகப் பிதற்ற ஆரம்பித்தாள்.

“தான் கையெழுத்துப் போட்டுக்கொடுத்தது கடன் நோட்டு என்பதை இப்பொழுதுதான் உணர்ந்தாள். முனுசாமியைப்பற்றி என்னென்னவோ சொன்னாள். யார் கேட்பது? அவள் கெட்டழிந்து கர்ப்பமாகி விட்டதால் பைத்தியம் பிடித்து விட்டதாக முனுசாமியே சாதித்து விட்டான். அவளுடைய

பேச்சும் செய்கையும் அவளைப் பைத்தியக்காரி யாகவே ஆக்கி விட்டன."

"ஐயோ பாவம்!" என்ற வார்த்தைகள் என்னையறியாமல் வெளி வந்தன. கண்களில் நீர் பொல பொலவென்று கொட்டிற்று.

"இதெல்லாம் நடந்து பன்னிரண்டு வருட மிருக்கும். செல்லம் அப்பொழுது போனவள் தான். கோட்டூருக்கு வந்து இரண்டு வருடம் தான் ஆகிறது" என்றார் பெரியவர்.

"ஆமாம், முனுசாமி என்ன ஆனான்?" என்று கேட்டேன்.

"முனுசாமி இப்பொழுது வெறும் முனு சாமியல்ல. ராவ்பகதூர் முனுசாமிப் பிள்ளை"

"சரிதான்" என்று சொன்னேன். அதோடு எங்கள் சம்பாஷணை முடிந்தது.

சில மாதங்களுக்குப் பிறகு தினசரிப் பத்திரிகையில் கீழ்க்கண்ட செய்தி பிரசுரமாகி யிருந்தது.

**ராவ்பகதூர் முனுசாமிப் பிள்ளை கொலை!**

**பைத்தியக்காரியின் சேஷ்டையால் மரணம்.**

ராவ்பகதூர் முனுசாமிப் பிள்ளை சென்னை யிலிருந்து கோட்டூருக்குச் சென்ற சமயம் அவ் வூர் செல்லம் என்ற பைத்தியக்காரியால் கத்தி யால் குத்தப்பட்டார். கூக்குரல்கேட்டு ஆட்கள் தேடிப் பார்த்ததில் பைத்தியக்காரியைக் காணோம். அவர் மார்பில் சொருகப்பட்டிருந்த கத்தியின் கைப்பிடியில் ஒரு கடிதம் சுற்றப்

பட்டிருந்தது. அதில் கண்டிருந்தவிஷயம் பின் வருமாறு :—

முனுசாமியைப் பழிக்குப் பழி வாங்கவே இவ்வளவு நாள் காத்திருந்தேன். என் வேலை முடிந்து விட்டது. எனக்குப் பிறந்த குழந்தை, சிதம்பரம் மேல வீதி கோவிந்தசாமி பிள்ளை வீட்டில் இருக்கிறான். அவன் பெயர் ராமசாமி. முனுசாமிக்கு இப்பொழுது இருக்கும் சொத்து முழுமையும், எங்களுடையதே. காருண்ய மிக்க சர்க்கார், முனுசாமியின் சொத்து முழுமையும் என் மகன் ராமசாமி அடைய ஏற்பாடு செய்யவேண்டும். என் மகனைக் காப்பாற்றிய கோவிந்தசாமி பிள்ளைக்கு, எங்கள் சொத்தில் பாதி சேரவேண்டியது. என்னை இனி யாருமே பார்க முடியாது. தேடுவதில் பயனில்லை.

**செல்லம்.**

ஆஸ்பத்திரியில், முனிசாமி பிள்ளையிடம் மரண வாக்குமூலம் வாங்கும்போது இக் கடிதத்தைப் படித்துக் காட்டினார்கள். அவர் அவ்வளவும் உண்மை என்றாராம்!

# தெய்வப் பிறவி

"காதலியின் தியாகம்" என்ற படம் திரையில் ஓடிக்கொண்டிருக்கிறது. கோபுவும் கமலாவும் வெகுகவனமாகப் படம் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். கமலா, "இதில் வருகிற அவ்வளவும் உண்மைதானா?" என்று மெதுவாகக் கேட்டாள். "ஆமாம் அவ்வளவும் உண்மைதான்" என்று தீனக் குரலில் சொன்னான் கோபு. படம் நடந்துகொண்டிருக்கிறது.

* * * *

புதுவை தனசாமி முதலியார் என்றால் பலருக்கும் தெரியும். அவர் எழுத்தாளரல்ல, பிரசங்கியுமல்ல, அரசியல் வாதியுமல்ல, அப்படியிருந்தும் அவரை எல்லாரும் தெரிந்திருப்பதற்குக் காரணம் பெரிய வியாபாரியாய் இருப்பதனால் தான். அவர் எல்லாப் பத்திரிகைகளிலும் தவறாமல் போடுகிற விளம்பரம்தான் இவ்வளவு பிரபலத்திற்கும் காரணம். பெரிய வியாபாரி என்றால் பணக்காரராகவும்தான் இருப்பார். சொல்ல வேண்டியதில்லை. ஆனால் சொல்லவேண்டிய முக்கியமான விஷயம் அவர் பெரிய கருமி என்பது தான். "கலியுகக் கர்ணன்" என்று அவரைச் செல்லப் பெயரிட்டு அழைப்பதிலே அவ்வூர் வாசிகளுக்கு அளவற்ற பிரியம். அவர் கருமியாய் இருப்பதற்குக் கார

ணம், ஒவ்வொரு பைசாவையும் நெற்றி வியர்வை உடம்பில் விழும்படியாக உழைத்துச் சம்பாதித்ததால் தானும்!

அவர் சம்பாதித்த சொத்தை ஆள்வதற்குப் பிள்ளை கிடையாது. ஒரே ஒரு பெண் தான். ஆண் குழந்தை எப்பொழுது பிறக்கும் என்று ஜோசியம் பார்ப்பதற்குக் கொஞ்சம், பீடா பரிகாரத்திற்காகக் கொஞ்சம் என்று பணத்தைத் தட்டிக்கொண்டுபோன ஜோசியர் பலர்.

கடைசியில் பெண்ணுக்குக் கலியாணம் செய்து அதன் வயிற்றில் ஒரு 'குஞ்சு' பிறந்து பார்த்துவிட்டுச் சாவது என்ற முடிவுக்கு வந்தார் முதலியார்.

வீட்டோடு மாப்பிள்ளையாக ஒரு பையனைத் தேடிப்பிடித்தார். பிறந்த வீட்டில் தனக்குள்ள சம்பந்தத்தை அறவே ஒழித்து விட்டுத் தான் பையனைக் கூட்டி வந்தார். வீட்டோடு மாப்பிள்ளையாகப் பேசாமல் கிடப்பதற்கு அது தான் சரியான வழி என்று எண்ணினர் போலும்!

மாப்பிள்ளை கோபுவுக்கும் கமலாவுக்கும் திருமணம் நடந்தது. மாப்பிள்ளை மாமனரோடு கடையிலிருந்து "பெட்டியடி" பழகினர்.

கோபு பெரிய அதிருஷ்டக்காரனென்றும் மாமனருடைய சொத்தெல்லாம் அவனுக்குத் தான் என்றும் ஊரிலுள்ளவர்கள் பேசிக் கொண்டார்கள். உண்மை கோபுவைக்கேட்டால் தானே தெரியும்? அடிமை வாழ்விலும்

பெரிய அடிமை வாழ்வா யிருந்தது இது. சொல்லப்போனால் இந்த வாழ்க்கையில் அவனுக்குக் கஷ்டமேயில்லை. என்றாலும், 'சுதந்திரமில்லை' என்று நினைத்ததாலேயே இது பெரிய அடிமை வாழ்வாகத் தோன்றி விட்டது! எல்லாம் மனப் பரிபக்குவம் தானே காரணம்?

கொபுவுக்குத் திடீரென்று தான் ஒரு காலத்தில் சேர்ந்திருந்த பழைய நாடகமேடை நினைவு வரவே, ஒரு சினிமாக் கம்பெனி ஆரம்பித்தால் என்னவென்று தோன்றி விட்டது. பணக்காரர் வீட்டு மாப்பிள்ளை என்றால் தோழர்கள் சேருவதற்குக் கேட்கவா வேண்டும்? தோழர்கள் சேரச் சேர பணத் தேவை அதிகமாகி விட்டது. இஷ்டம் போல் செலவழிக்கப் பணம் இல்லாதபோது, இது அடிமை வாழ்வாகத் தோன்றுவதில் ஆச்சர்யமில்லையே!

சினிமாக் கம்பெனி ஆரம்பிக்கப் பணம் வேண்டுமே, என்ன செய்வது? "ஒரு ஐயாயிரம் ரூபாய் இருந்தால் போதும். அதை வைத்துக் கொண்டு பங்குகள் சேர்த்துப் படம் பிடித்துப் பணத்தை அள்ளிக் கொட்டி விடலாம்" என்று தோழர்கள் சொன்னார்கள். கமலாவை விடாமல் நச்சரிக்கத் தொடங்கினான். எப்படியாவது ஐயாயிரம் ரூபாய் 'சரி பண்ணி'த் தரும் படியாகக் கேட்டுக் கொண்டே வந்தான். அவள் என்ன செய்வாள்? பெட்டியிலிருந்த நகைகளை எடுத்துக் கொடுத்து விட்டாள். அவளால் முடிந்த உபகாரம் அவ்வளவு தான்! சென்னைக்குப் புறப்பட்டார் பட முதலாளி கோபால்

சாமி முதலியார். தோழர்களும் தான் கூடப் போனார்கள்!

விநியோகஸ்தர்களிடம் முன்னாடியே பணம் வாங்கி விட்டார்கள். யார் யாரையோ பங்குதாரர்களாக்கினார்கள். கலையபிவிருத்திக்காக என்றே பங்குதாரர்களாகச் சேர்வதாக எல்லாரும் சொல்லிக் கொண்டார்கள். ஆனால் ஒவ்வொருவருக்கும் உள் நோக்கம் ஒவ்வொரு தினுசாகத் தான் இருந்தது!

கொழும்புவைச் சேர்ந்த ஒரு உயர் குடும்பப் பெண்ணான மிஸ் பாக்கியலட்சுமியை கதாநாயகியாகத் தேர்ந்தெடுத்தான் கோபு.

பாக்கியலட்சுமியைப்பற்றி இங்கே கொஞ்சம் சொல்லியாக வேண்டும். அவள் கொழும்புவில் பிரசித்திபெற்ற ஒரு அரசியல் வாதியின் மகள். பரம்பரையாகவே படித்த குடும்பம். பணக்காரர்கள். பாக்கியலட்சுமி சங்கீதத்தில் தேர்ந்தவள். நல்லொழுக்கமும் சிறந்த குணமுமுடையவள். அப்படிப்பட்டவள் சினிமாவுக்கு ஏன் வந்தாளென்றால் கலைப் பைத்தியம்தான் காரணம்!

பாக்கியலட்சுமியைக் கதாநாயகியாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட படம் "கர்நாடகத்தின் அலங்கோலம்" என்பது. இது ஹாஸ்ய சமூக சீர்திருத்தப் படமாகும்.

* * *

அங்கே 'அலங்கோலம்' பிரமாதமாகத் தயாராகிக் கொண்டிருந்தபோது புதுவையில்

தனசாமி முதலியார் ஆர்ப்பாட்டம் பண்ணிக் கொண்டிருந்தார். நகைகளைக் கொடுத்ததற்காகக் கமலாவைப் பிரமாதமாகக் கோபித்துக் கொண்டார். "அந்தப் பயல் வரட்டும், பேசிக் கொள்ளுகிறேன்" என்றார்.

கமலா பல கடிதங்கள் எழுதினாள். 'அலங்கோல' மும்முரத்தில் இதை யார் கவனிப்பது?

* * *

படம் முழுமையும் பிடித்தான பின்னர் அதை ஸ்டூடியோவிற்குள்ளேயே போட்டுப் பார்த்தார்கள். கதாநாயகி தோன்றுகிற இடங்களிலெல்லாம் ஒரே இருட்டடிப்பாக இருந்தது.

கோபு வெளியே வந்தான். பாக்கிய லட்சுமியும் கூடவே வந்தாள். கோபு முகத்தில் ஈயாடவில்லை. "காமிராக்காரன் இப்படிச் செய்வான் என்று அப்பொழுதே நான் யூகித்ததுதான்" என்றாள்.

"அட ராமா! ஏன் அப்படி யூகித்தீர்கள்?" என்றான் கோபு படபடப்புடன்.

"அவன் நடத்தைதான் காரணம்!" என்றாள்.

"இதனால்தான் உயர் குடும்பப் பெண்கள் சினிமாவில் நடிக்கக் கூடாது என்று சிலர் சொல்லுகிறார்களோ?" என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டான் கோபு.

விநியோக உரிமை பெறுவதற்காக ஏற்கனவே பணம் கொடுத்திருந்தவர்கள் பணத்

தைத் திருப்பிக் கேட்டனர். பாக்கிக்காரர் வாசலில் கூடிவிட்டனர். தோழர்கள் கம்பி நீட்டினர். தம்முடைய சொத்துக்கும் கோபு வுக்கும் எவ்வித சம்பந்தமு மில்லை என்ற தனசாமி முதலியாரின் விளம்பரம் பத்திரிகை களை அலங்கரித்தது. இடிமேல் இடிமாதிரி தான்! பட முதலாளி கோபால்சாமி முதலியார் வாள் பங்களாவிற்குள் புகுந்து படுத்துக்கொண் டார். எண்ணாததெல்லாம் எண்ணி எண்ணி அந்த ஏழை நெஞ்சம் புண்ணாகப் போய் விட்டது!

அப்பொழுதுதான் காமதேனு மாதிரி பங்களாவிற்குள் நுழைந்தாள் பாக்கியலட்சுமி. மானேஜரைக் கூப்பிட்டாள். யார் யாருக்கு என்னென்ன பாக்கி என்று கணக்குப் பார்த் தாள். ஐம்பத்தேழாயிரத்து எண்ணூற்றுச் சில்லறைக்குச் 'செக்' கொடுத்து உடனே எல்லாவற்றையும் தீர்க்கும்படியாகச் சொன் னாள்.

கண்ணீர் ஆறாகப் பெருக படுக்கையை விட்டு வெளியே வந்தான் கோபு.

"ஏன் வருந்துகிறீர்கள்? ஒன்றில் நஷ்டம் வந்தால் இன்னொன்றில் லாபம் வந்துவிடு கிறது. கவலை வேண்டாம். அடுத்த படம் பிடிக்க ஆரம்பம் செய்யுங்கள்!" என்றாள்.

பகவான்தான் பாக்கியலட்சுமி ரூபத்தில் பிரத்தியட்சமாகி யிருப்பதாக கோபு எண்ணிக் கொண்டான்.

'கண்டதும் காதல்' என்ற புதுப் படம் ஆரம்பமாகியது. கோபு, பாக்கியலட்சுமி இருவருமே இந்தப் படத்திற்கு முதலாளிகளாகையால் அடிக்கடி சந்தித்துப் பேசவேண்டிய சந்தர்ப்பமும் அவசியம் ஏற்பட்டது.

"உன்னை மனைவியாக அடையும் பாக்கியம் கிடைக்குமானல் என்னுடைய மகிழ்ச்சிக்கு எல்லையே இருக்காது" என்று துணிந்து கூறிவிட்டான் கோபு!

"உங்களுக்கு இதுவரை கலியாணம் ஆகவில்லையா? அப்படியானல் நாம் இருவரும் கலியாணம் செய்து கொள்வதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை" என்ருள் பாக்கியலட்சுமி.

இருவருக்கும் 'ரிஜிஸ்டர்' விவாகம் நடந்து விட்டது.

'கண்டதும் காதல்' படம் வெளியாகி விட்டது. அபாரமான வசூல். பாக்கியலட்சுமி பெரிய நட்சத்திரமாகி விட்டாள். அடுத்த படமும் ஆரம்பமாகி விட்டது.

ஒரு நாள் கோபு கம்பெனி விஷயமாக வெளியூர் சென்றிருந்தான். அன்று வந்திருந்த கடிதங்களை எல்லாம் பாக்கியலட்சுமி பார்த்துக்கொண்டிருந்தாள். கோபு விலாசமிட்ட ஒரு கடிதத்தில் பின் வருமாறு எழுதப் பட்டிருந்தது.

அன்புள்ள கணவருக்கு,

கமலா வணக்கம். இரண்டு வருஷமாக இருநூறு கடிதங்களுக்குமேல் எழுதியிருப்பேன். ஒன்றுக்கும் பதில் இல்லை. குழந்தை ராஜூ 'அப்பா அப்பா' என்றே கதறுகிறான். ஒரு முறை வந்து விட்டாவது போகக்கூடாதா? இப்பொழுது யாரோ சினிமாக்காரியைக் கலியாணம் செய்துகொண்டிருக்கிறீர்களாமே? எங்கிருந்தாலும் சௌக்கியமாக இருக்க இறைவன் அருள் புரியட்டும். தங்களுக்கு இந்த அடியாள் தொண்டு செய்யக் கொடுத்து வைக்கவில்லைபோலும்! உங்களை ஒரு முறை பார்க்க ஆசையாயிருக்கிறது.

அடியாள்,

கமலா.

இப்பொழுதுதான், கோபுவுக்கு ஏற்கனவேயே கலியாணம் ஆகியிருக்கிற விஷயம் கமலாவுக்குத் தெரிந்தது. இவர் ஏன் இப்படி பொய் சொன்னர் என்று அவள் பலமுறை யோசித்தாள். விளங்கவில்லை.

கோபு பொய் சொன்னதென்னவோ உண்மைதான். அதற்குக் காரணம், பாக்கியலட்சுமி மீது கொண்டிருந்த அன்பும், படத்தொழிலின் மீதிருந்த மோகமுந்தான். ஆனல் அவன் இப்படிப் பொய்சொல்லி விட்டதற்காக எத்தனையோ நாட்கள் தன்னையே நொந்து கொண்டிருக்கிறான்.

கமலாவின் நிலையை ஒரு நிமிஷம் யோசித்துப் பார்த்தாள் பாக்கியலட்சுமி. அவள் உள்ளம் பதறியது. உடனே வந்து சேரும்படி கமலாவுக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டாள்.

இரண்டு தினங்களுக்குப் பிறகு கோபு வந்து சேர்ந்தான். அவன் வந்து சேர்ந்த அரை மணிக்குப் பிறகு கமலாவும் ராஜுவும் வந்து சேர்ந்தனர். ராஜு, 'அப்பா!' என்று கட்டிக் கொண்டான். கோபு அவனை அணைத்த வாறே 'கமலா!' என்று ஆச்சர்யத்தோடு கூப்பிட்டான்.

பாக்கியலட்சுமி கமலாவைப் பார்த்து "வாம்மா, வந்து உட்கார், இவரைக் கலியாணம் செய்துகொண்ட சினிமாக்காரி நான் தான். தனக்குக் கலியாணம் ஆகவில்லை என்று இந்த அரிச்சந்திரன் சொன்னதை நம்பித்தான் இவரைக் கலியாணம் செய்து கொண்டேன்! இதோ நான் புறப்படத் தயாராகி விட்டேன். அதோ என் சாமான்களெல்லாம் கட்டித் தயாராகி விட்டன. இந்த ஸ்டூடியோவையும் கம்பெனியையும் தங்களுக்கே சொந்தமாக்கி விட்டேன். வருகிறேன்" என்று எழுந்தாள்.

கோபு "லட்சுமி!" என்றான்.

லட்சுமி "என் மீது உண்மையிலேயே உங்களுக்கு அன்பிருக்கிறதா?" என்றாள்.

"ஆமாம், சந்தேகமா?" என்றான்.

"அது உண்மையானல், என் தமக்கை கமலாவையும், என் குழந்தை ராஜுவையும் அன்புடன் காப்பாற்றுங்கள். இனி கலையின்

உயர்வுதான் என் வாழ்க்கை யின்பம். இனி நான் ஒரு கன்னி போலத்தான்" என்றாள்.

அதற்கு மேல் ஒரு நிமிஷம் கூடத் தாமதி யாமல் புறப்பட்டு விட்டாள்.

* * *

ஒரு வருடத்திற்குப்பிறகு பாக்கியலக்ஷ்மி பிலிம் கம்பெனியாரால் எடுக்கப்பட்ட காதலி யின் தியாகம் என்ற படத்தைத்தான் ஆரம்பத் தில் சொன்னமாதிரி கோபுவும் கமலாவும் பார்த்துக்கொண்டிருந்தனர். கோபுவின் உண்மை வாழ்க்கை தான் அந்தப் படத்தின் கதை. முதலில், கோபு படம் பிடித்தது, பாக்கி யலட்சுமியின் கல்யாணம், கமலாவின் விஜயம், பாக்கியலட்சுமியின் தியாகம் எல்லாம்தத்ரூபம். அதன் பின் பாக்கிய லட்சுமி கணவனாகிய கோபுவின் படத்தை வைத்தே பூஜை செய்து கொண்டிருக்கிறாள். இப்படி முடிகிறது படம்.

படம் முடிந்தவுடன் எழுந்தாள் கமலா. பெருமூச்சுவிட்டுக் கொண்டே இடத்தை விட் டெழுந்தான் கோபு. அவனுடைய கண்களில் நீர் துளிர்த்தது.

கமலா :—இந்தப் படம்...........

கோபு :—இது பாக்கியலட்சுமி எடுத்த படம். எங்கள் வாழ்க்கை தான் இது.

"நான் அப்பொழுதே உணர்ந்து கொண் டேன்" என்றாள் கமலா.

அவன் அதைக் கவனிக்க வில்லே. "அவள் தெய்வப் பிறவி" என்று முணுமுணுத்தான்.

"அக்காளேப்பார்க்க வேண்டும்" என்ருள்.

"நாளேயே புறப்படுவோம்" என்ருன்.

# இசைவாணன்

**பூ**ஜை அறையிலிருந்து கான ரசத்தைப் பொழிந்துகொண் டிருந்தான் சித்திரசேனன். அவனுடைய யாழிலிருந்து அமுதவெள்ளம் பெருக்கெடுத்துக்கொண்டிருந்தது. தான் வந்த வேலையை மறந்து அந்த இன்ப நாதத்தைக் கேட்டுக்கொண் டிருந்தாள் சங்கீத திலகமும் நாட்டிய ராணியுமான ரூபசுந்தரி.

வல்லாள மகாராஜாவின் மகாசபையில் தலைசிறந்த நாட்டியக்காரி ரூபசுந்தரி. சிறந்த பாட்டுக்காரி. அவள் குரல் கேட்டு குயில் வெட்கமுறும். நடை கண்டு அனனம் பதுங்கும். நாட்டியத்தைக் கண்டால் மயில் அஞ்சும். கிள்ளைபோல் மழலை மொழிவாள். தேனினும் தீஞ்சுவைச் சொற்கள் அவளுடையவை. நாட்டியத்திற்காகவே அவள் பிறந்தவளா? அவளுக்காகத்தான் நாட்டியம் உண்டானதா? நிச்சயமாகச் சொல்லமுடியாது. பருந்தும் நிழலும்போல் இயலை யொத்துச் செல்லுகின்ற இசை யமுதத்தை அவளிடம்தான் கேட்கலாம். இனிமையின் எல்லை. அவளுடைய ஒவ்வொரு சொல்லும் உள்ளத்தைக் குளிரச்செய்யும். உடல் முழுமையும் ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தும். இன்பம் இசை உருவத்தில் புறப்பட்டு வருகிறதோ என்று எண்ணவேண்டும்.

அமுதத்தை நாதமாக அள்ளி இறைக்கும்பொழுது மது உண்ட வண்டாவதைத் தவிர வேறு வழியில்லை.

நாட்டியத்தின் பண்பாட்டுக்கும் லாகவத்திற்கும் ஏற்றாற்போல அங்கங்கள் அமைந்திருந்தன. சிறுத்த இடை. அதற்கேற்ற உடல். நீண்ட கரங்கள். நல்ல உயரம். பசும் பொன் மேனி. முத்துப் போன்ற பற்கள் லேசாக வெளியில் தெரியும்படி அவள் புன்முறுவல் பூக்கும்பொழுது நாம் மட்டுமல்ல, மன்மதன் கூடச் சொக்கிப்போகத்தான் வேண்டும். அவளுடைய ஒவ்வொரு வளைவிலும், நெளிவிலும் எவ்வளவோ அர்த்தங்கள். நாட்டியத்தின் போது நாம் பார்ப்பது ரூபசுந்தரியை யல்ல; அவள் காட்டும் சம்பவங்களை.

ரூபசுந்தரி நூற்றுக்கணக்கான நாட்டிய சங்கீதக்காரிகளுக்குத் தலைவி. அதேபோன்று வித்துவான்களுக்கும், இசைவாணர்களுக்கும் தலைவன் சித்திரசேனன்.

ரூபசுந்தரியின் சங்கீதம் அல்லது நாட்டியம் என்றால் அதற்கு யாழ் வாசித்துச் சோபிதம் அளிப்பவன் சித்திரசேனன். அவன் சிறந்த பாடகன். யாழ் வாசிப்பதில் அவனுக்கு அவனே சரிநிகர். இன்னும் அவன் கவிஞன் கூட.

அவன் யாழ் நரம்புகளைத் தொடுவது போன்றுதான் தோன்றும்! இல்லை, எதிரிலிருப்பவர்களின் இதய நாடியைத் தட்டிவிட்டு

வேடிக்கை பார்க்கிறான், அந்த சப்த ஜாலக் காரன். அவனுடைய யாழிலிருந்து உண்டா கிற ஒலி நம் இதயத்திலிருந்து உண்டாகி உடலைப் புளகாங்கிதமாக்குவதுபோ லிருக்கும். அவனுடைய வீணையின் ஒலியிலே கிளி கொஞ்சும். குயில் கூவும். மயில் ஆடும். அவன் யாழிலிருந்து குழைத்துக் குழைத்துத் தெளிக் கிற இன்பத் தேனை ஒருமுறை பருகிவிட்டால் எப்பொழுதும் பருகிக்கொண்டே யிருக்கலாம். அந்த ரீங்காரம் காதைவிட் டகலாது.

சித்திரசேனன், கட்டழகன்; கம்பீர மானவன். அவன் முகத்திலே லக்ஷிமியும் சரஸ்வதியும் தாண்டவமாடுவது பச்சிளங் குழந் தைக்கும் தெரியும். அகன்ற நெற்றியில் காட்சி யளிக்கும் விபூதியும், குங்குமமும் தெய்வீக மான எண்ணத்தையே எழுப்பும்.

அவன் ஆயிரக் கணக்கான கவிகளைப் பாடியிருக்கிறான். ஒன்றைக்கூடப் பொதுமக் கள் கண்டார்க ளில்லை. அவ்வளவும், அவன் யாரைக்குறித்துப் பாடினனே அந்தத் தெய்வத் துக்கே அர்ப்பணமாக்கி விட்டான்.

ரூபசுந்தரி தலையசைத்தால் அவளைத் திரு மணம் செய்துகொள்ள ராஜாக்க ளெல்லாம் காத்துக்கொண் டிருந்தார்கள். ஆனல் யாரை யும் மனத்தாலும் சிந்திக்கவில்லை ரூபசுந்தரி. பல வருடங்களாகத் தன்னுடன் யாழ் வாசித்து வருகிறானே கலாசுந்தரன், ரசிகமணி சித்திரசேனன், அவனைக் காதலித்தாள். அவன் இசையிலே சொக்கினள். அழகில்

மயங்கினுள். ரசிகதன்மைக்கு உடலை மட்டு மல்ல உயிரைக்கூடத் தியாகம் செய்துவிடத் தயாராஞள்.

பிரம்மாண்டமான சபையில் எத்தனையோ ரசிகமணிகளுக் கிடையில், சித்திரசேனன் ரசிப்பதும் ஆனந்திப்பதும் ஒருதனி முறை தான். கற்றவளைக் கற்றவன் அல்லவா ரசிக் கிருன்!

இப்பொழுது அவள் மீட்டாத வீணை; சூடாத மலர். சித்திரசேனன் சேர்ந்தால் எல் லாம் சரியாய்விடும். பருவம் வீணே கழிவதை அவள் விரும்பவில்லை. துடிதுடித்தாள்; கேட்டுவிடுவது என்று தீர்மானித்தாள்.

ஆம். கேட்டேவிட்டாள்.

பூஜை முடிந்ததும், ஆசனத்திலமர்ந்து, வீணையை மெதுவாக மீட்டிக்கொண் டிருந்தான் சித்திரசேனன். உள்ளே நுழைந்தாள் நாட் டிய ராணி.

"ரூப சுந்தரி! வாருங்கள்! ஏது இவ்வ ளவு தூரம்?"

"தங்களைப் பார்க்கத்தான்!"

"அப்படியா! என் பாக்கியம்! அரண் மனைக்குப் போகிற வழியில் இப்படி இங்கே இறங்கினீர்கள் போலும்!"

"நேராக—ஆமாம், இந்த எனது அலங் காரங்களைப் பார்த்து அரண்மனைக்குப் போகி

றேனென்று தீர்மானித்தீர்களோ? இதுவும் உங்களுக்குத்தான்."

"எனக்காகவா? சந்தோஷம்! உட்காருங்கள்."

ரூபசுந்தரி ஆசனத்தில் அமர்ந்தாள். சித்திரசேனன் மீண்டும் பேசலானன்.

"நானே இப்பொழுது தங்களைப் பார்க்க வரலாமேன்றிருந்தேன்"

"ஓ! அதற்குள் நானே வந்துவிட்டேனக்கும்!"

"ஆமாம். நான் தங்களைப் பார்க்க விரும்பிய விஷயம்....................

"எனக்குத் தெரியும்!'

"பெண்கள் கலாசுந்தரிகள், ரூபசுந்தரிகள், ஞானசுந்தரிகள். இது என் அபிப்ராயம் என்பது தங்களுக்குத் தெரியுமே. இன்னும், பெண்களுக்கு வணக்கம் செலுத்த வேண்டும் என்பதும் என் கருத்து. பெண்கள் என்ருல் மாதாக்கள்."

"என்ன? மாதாக்கள். ம். ம்."

"ஆமாம். பெண்கள் என்ருல் மாதாக்கள் என்பது என் கருத்து. எனவே நான் தங்களைப் பார்க்க விருந்த விஷயத்தைத் தாங்கள் அறிந்துகொண்டிருக்க முடியும். அவ்வளவுதூரம், எதிர்காலத்தை உணரும் ஆற்ற

வில்லாவிட்டால் தாங்கள் சிறந்த ரசிகமணி யாக இருக்கமுடியா தல்லவா?"

"ஆமாம், எல்லாம் தங்களைப் போன்றோ ரின் ஆசி."

அவள் குரல் கம்மியது. தவறு செய்து விட்டவளைப்போல இருந்தது அவள் முகம். நெற்றியில் வியர்வை துளிர்த்தது.

"அரசனால் எனக்கு அளிக்கப்படும் பொற் காசுகளை என்ன செய்வ தென்று இவ்வளவு நாளாக யோசித்து வந்தேன். இப்பொழுது தெய்வப் பணிக்குக் கொடுத்துவிடத் தீர்மா னித்து விட்டேன் அதோடு நாட்டியக் கல்லூரி யையும் இசைப்பள்ளியையும் தோற்றுவிக்க விரும்புகிறேன். இறைவனுடன் சம்பந்தப் பட்ட காரியங்கள் தாமே இவை யாவும்?"

"ஆமாம், உண்மை."

"இதைப்பற்றி யோசிக்கத்தான் தங்களி டம் வரலாமென் றிருந்தேன். கும்பிடப்போன தெய்வம்..........."

"குறுக்கே வந்தது! அப்படித்தானே!"

"ஆமாம்."

"நான் தங்களிடம் வந்தது வேறு விஷயத் திற்காக!"

"என்ன விஷயம்?"

"சொல்லவா?"

"சொல்லுங்கள்"

"நான் கன்னி"

"ஆமாம்"

"கட்டழகி"

"நான் சொல்லுகிறேன். கட்டழகி! இசை வாணி! மலர்ந்த மலர்! எழிற் குமரி!..........."

"ஆ! எவ்வளவு இன்பம் தரும் சொற்கள்! தங்கள் பேச்சு என்னை மயக்குகின்றது. இன்பத்தில் திளைக்க வைக்கின்றது. தாங்கள் ........தாங்கள் கட்டழகன்! இசைவாணன்! ரசிகன்!"

"அம்மணீ!........அம்மணீ! தங்கள் உடம்புக்கு என்ன? யாராவது தங்களை ஏதாவது சொன்னார்களா?........."

"இல்லை; யாரும் என்னை ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் ஒருவரின் சொல்லுக்கு ஏங்குகிறேன்; தவிக்கிறேன் நான் காட்டில் மலர்ந்த மலர். பூசப்படாத சந்தனம். நீ....... நீதான் என் அரசன்! நீதான் என் இதய வீணையை மீட்டக்கூடியவன்! நீயே என் நாதம்! நாதன்"

"அம்மா!"

"என்ன..........?"

"தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?"

"என்ன சொல்லுகிறேனா? தெரியவில்லையா? என் வாழ்க்கையாகிய வறண்ட பாலைவனத்தைக் குளிர்ந்த பூங்காவாக ஆக்கக்கூடி

யவன் நீதான். என் வாழ்வின் சுடர்விளக்கு நீயே!"

"தாயே!"

"'தாயே!'--இம்மொழி என் உள்ளத்தைச் சுடுகிறது! 'கட்டழகி' 'எழிற்குமரி' என்று சொல்!"

"என்னை மன்னியுங்கள் தாயே! என்னைத் தாங்கள் உணர்ந்துகொள்ளாததுபற்றி வருந்துகிறேன்."

"என்ன சொல்லுகிருய்?"

"அம்மணீ! சற்றுப் பொறுமையுடன் அமருங்கள், விவரமாகச் சொல்லுகிறேன். நான், என்னை ஈஸ்வரனுக்குஅர்ப்பணித்துவிட்டேன். காடுமலைகளுக்குச் சென்று ஈஸ்வரனைத் தேடுகிருர்கள் சிலர். யோகம் செய்து இறைவனைக் காண முற்படுகிருர்கள் பலர். நான் நாதத்தில் இறையைக் காண விரும்புகிறேன். ஈஸ்வரன் நாதப் பிரம்மமாயிருக்கிருன். அவனைக் காண வேண்டும். வேறு திசையில் என் கவனம் செல்லாது அம்மணி!"

"வெறுங் கனவு. இந்த இன்பகரமான உலகத்தை—ஆனந்த மயமான வாழ்க்கையை ரசிக்கத்தெரியாமல் கைவிடுகிறீர்கள்?"

"வெறுங் கனவா? அதுவும் இறைவனின் கட்டளையாகத்தா னிருக்கவேண்டும்."

"இந்த உலகம் சுகபோகங்கள் நிறைந்தது. அனுபவிக்க உரிமையும் அதிகாரமும்

உடையவர்கள் நீங்கள். ருசி பார்க்காமலே வெறுத்துத் தள்ளுகிறீர்கள். இறைவனுல் உண்டாக்கப்பட்ட இவைகளை வெறுப்பதே அவன் கட்டளைக்கு மாருக நடப்பதாகாதா ?"

"இல்லை யம்மணி. இவை மாயை என்பது எனக்குத் தெரியும்."

"பெண்மை இன்பம் பேரின்பம். அறியாமற் பேசுகின்றீர். என் அதரங்கள் துடிக்கின்றன. என்ன சுகம்! நினைத்தாலும் நெஞ்சு குளிரும் சுகம்!"

"ஆம், அது அற்ப சுகம்"

"அப்படிச் சொல்ல வேண்டாம். நீங்களும் நானும் சேர்வது, பாலாடையைத் தேனில் தோய்த்தல் போலாகும். தாங்கள் தேன்........"

"தாங்கள் நாடும் சுகம் என்னிடம் கிடைக்காது. மன்னிக்க வேண்டும். உங்களுக்காகக் காத்துக் கிடக்கிருர்கள் ராஜ குமாரர்கள். போங்கள், தாங்கள் என்னை நாடுவது, குழந்தை தன் நிழலைப் பிடிக்க முயல்வது போன்றதே."

"சித்திரசேனு ! நீ விஷயந்தெரியாமல் மறுக்கிருய். மறுபடியும் என்னிடம் வருவாய். அப்பொழுது நான் கசங்கிய மலராய் இருப்பேன் ; இப்பொழுதோ பறித்த மொட்டு. வீணுக்காதே. என்ன சொல்லுகிருய் ?"

"அம்மா! கரும்பின் ரசத்தைப் பருகிக் களித்தவன், அதன் சக்கையை விரும்புவான் என்று எண்ணுவது வீண் பிரமையே !"

"கடைசியாக..............."

"கடைசியாக இந்த இடத்தைவிட்டு நீங்கள் இப்பொழுதே போக விரும்புகிறேன்"

"அப்படியா! இந்தச் சம்பவம் நினைவிலிருக்கட்டும். இதற்காக நீ பிறகு வருந்துவாய்."

"நீங்கள்தான் வருந்தப் போகிறீர்கள். தெரியாமல் இறங்கப்போவது படு குழி. இறைவன் உங்களைக் காப்பாற்றட்டும்!"

புன்னகை பூத்த முகத்துடன் வந்த ரூபசுந்தரி வியர்வை சொட்ட கடுகடுத்த முகத்துடன் திரும்பினாள். அவளுக்கு மட்டும் பலம் இருக்குமானால் சித்திர சேனனின் வீணையை உடைத்து அவனைக் கசக்கிப் போட்டிருப்பாள். என் செய்வது? அவள் மெதுவாக நடந்து வெளியே வந்தாள். அவள் தலை மறைந்ததும் சித்திரசேனன் தன் போக்கில் வீணையை மீட்ட ஆரம்பித்தான்.

*　　　*　　　*

கன்னத்தில் கைவைத்தவண்ணம் மஞ்சத்தில் சாய்ந்துகொண்டிருந்தாள் ரூபசுந்தரி. தாதிப்பெண் உள்ளே வந்து "இளவரசர் மார்த்தாண்ட பூபதி வந்திருக்கிறார்" என்றாள்.

"அழைத்து வா" என்று உத்தரவிட்டாள் சுந்தரி.

**சுந்தரி** :—வாருங்கள் இளவரசே!

**மார்த்தாண்டன்** :—உன் முகம் வாட்டமுற்றிருக்கிறதே ஏன்?

**சுந்தரி** :—கானலை நீர் என்று நம்பியதால்.

**மார்த்தாண்டன்** :—என்ன ?

**சுந்தரி** :—இளவரசே! சிறிது பழ ரசம் அருந்துங்கள். என்ன காரியமாகப் பார்க்க வந்தீர்களோ ?

**இளவரசன்** :—என்ன சுந்தரி! புதிதாகக் கேட்கிறாய். ஒன்றல்ல இரண்டல்ல. நான் இளவரச னானதிலிருந்து ஏழு வருஷங்களாக உன்னைக் கேட்டுக்கொண்டுதான் வருகிறேன். உன் கனிந்த பார்வையைப்பெற ஏழாண்டுகளல்ல, எழுபது ஆண்டுகள்கூட கடுந்தவம் கிடக்கலாம். ஆனாலும் அதை உடன் சுவைக்க வேண்டுமென்று என் உள்ளம் துடிதுடிக்கிறது.

**சுந்தரி** :—இனி நான் உங்கள் பொருள் தான்.

**இளவரசன்** :—நான் பாக்கியசாலி.

**சுந்தரி** :—அவனும் நானும் அபாக்கியசாலிகளான பின்பு தாங்கள் பாக்கியசாலி தானே ?

**இளவரசன்** —என்ன சொல்லுகிறாய் ?

**சுந்தரி** —என்னை அடையப் பெறாத மற்றவர்கள் அபாக்கியசாலிகள் என்றேன்.

மது உண்ட நரியைப் போலத் தலையை அசைத்தான் மார்த்தாண்டன்.

சிறிது நேரத்திற்குப் பின் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான் இளவரசன்.

"கவிஞர்களிடமும், கலா வல்லுநர்களிடமும் காமவேளின் குறும்பு அதிகமாக இருக்குமென்று சொல்லிக் கொள்வார்கள். அதைப் பொய்யாக்கி விட்டான் சித்திரசேனன். நாதத்தில் இறைவனைக் காணப் போவதாகச் சொல்லி யல்லவா என்னை நிராகரித்தான்! அவனைப் பழிக்குப் பழி வாங்காமல் விடுவதா? உம், கமலம்! வெளியே போகிற இளவரசரைக் கூப்பிடு, இவ்வாறு உத்தரவிட்டாள் நாட்டிய ராணி சுந்தரி. வந்தான் இளவரசன். கோதையின் குமுதச் செவ்வாயினின்றும் வெளிவரும் உத்தரவைச் சிரமேற்றாங்கிச் சென்றான் மார்த்தாண்டன்.

*                    *                    *

"இளவரசே! சித்திரசேனன் ஊரில் இல்லையாமே! ஊரைவிட்டே துரத்திவிட்டீர்களா?" என்றாள் சுந்தரி.

"இல்லை, நீசொன்னபடிதான் நான் செய்தேன். அவன் ஊரை விட்டே ஓடிவிட்டான் போலும்!"

தன்னுடைய பழிக்குப்பழியை—கட்டளையை நினைத்தாள். அவள் உள்ளம் பயத்தால் நடுங்கியது. இதயம் வெடித்து விடுவதுபோன்ற உணர்ச்சி தோன்றியது. இரு கரங்களாலும் மார்பை அழுத்திப் பிடித்த வண்ணம் மஞ்சத்தில் சாய்ந்தாள்.

*                    *                    *

ராமன் காடு சென்று நாடு திரும்பிய காலம்—அதாவது பதினான்கு வருஷங்கள் கழிந்தன இப்பொழுது அவள் பழய நாட்டிய ராணி. இருந்தாலும் அவள் அழகு ராணியாயிருந்தாள் என்பதை முகக்களை எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தது. அவள் நினைத்தால் ஆகாததொன்றில்லை. என்றாலும் அவள் மனதில் பதினான்கு ஆண்டுகட்கு முன் ஏற்பட்ட ஏக்கம் அகன்ற பாடில்லை. அவள்செய்த கொடும் பழி இதயத்தை அரித்துக்கொண்டே வந்ததென்று சொல்லலாம்.

அணிகலன்கள் அவளுக்குப் பாரமாகத் தோன்றின. உலக இன்பம் வேம்பாகக் கசந்தது.

ஒருநாள் அவள் தன்னுடைய சுகபோகங்கள் அத்தனையையும் கைவிட்டுக் கிளம்பினாள்.

ஒரு பாழ் மண்டபம், அங்கிருந்து இன்னிசை வெளிவந்துகொண் டிருந்தது. அவ்வழியே சென்றுகொண்டிருந்த ரூபசுந்தரி திரும்பிப் பார்த்தாள். அவள் கேட்ட குரல்; பழகிய குரல். ஓடினாள். கண்களை மூடியவண்ணம் சித்திரசேனன் பாடிக்கொண்டிருந்தான். அவன் பாதங்களில் வீழ்ந்தாள். அவள் செய்த கொடும்பழியை அவளால் பார்க்க முடியவில்லை போலும்! சித்ரசேனனின் இரண்டு கரங்களிலும் விரல்கள் இல்லை. அந்தோ! கொடுமை.

நாதத்தில் பிரம்மத்தைக் காணப்போவதாகச் சொன்னானல்லவா? நாதத்தைக் கிளப்ப

ஒட்டாது விரல்களை வெட்டி வீழ்த்தியவள் இந்தப் பாவியே.

வந்தவள் ரூப சுந்தரி 'என்பதை யறிந்தான் சித்திரசேனன் "சகோதரி! ரூபசுந்தரி! வா அம்மா!" என்று அன்போடு சொன்னான் சித்திரன்.

"சுவாமி! சுவாமி! நான் பாபி. தங்களை இக்கதிக் காளாக்கியவள் நானே. என்னை மன்னிப்பீர்களா?"

"நீயா செய்தாய்! இல்லை. இறைவனல்லவா செய்தான், உன்னால் செய்ய முடியாதம்மா."

"சுவாமி! இந்த வாழ்க்கை எனக்கு அலுத்து விட்டது."

"என்னுடைய வாழ்க்கையில் நிரந்தரமான ருசியைக் காண்கிறேனம்மா, யாழ் இல்லாவிட்டால் என்ன, வாய் இல்லையா அந்தப் பரமனைப் பாட."

"சுவாமி! இவள் தங்களுடனிருந்து இறைவன் பணியாற்ற வேண்டும்."

"எல்லாம் அவன் ஆணை."

சுபம்

முற்றிற்று

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை

உன் ... ம

# "பூம ... வ"

U. R. ஜீவரத்னம் - K. ... of T. K. Bros. )

நடி...

மற்...

K. சாரங்கபாணி
T. R. ராமச்சந்திரன்
D. பாலசுப்பிரமணியம்
S. V. சஹஸ்ரநாமம்
K. P. ஜயராமன்
நடனம். S. நடராஜ்

...சல்லம்
...பவல்லி
...ந்தலா
...ண்டாள்

N. S. கிருஷ்ணன் ... மதுரம்

டைர...

T. பா...

டிஸ்ட்ரிபியூடர்ச்...

...பம்


உத்தரவாதமுள்ள
நகை வியாபாரிகள்